வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk
மலர் : 05
13.10.2024 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 287
பக்கங்கள் : 16


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
T.P: 011 236 2086
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram
Ria MONEY TRANSFER
WESTERN UNION

## சிவராம் படுகொலை சம்பவம் உட்பட
# ஏழு விசாரணைகளை துரிதப்படுத்த உத்தரவு
## பதில் பொலிஸ்மா அதிபருக்கு நேற்று பொதுப்பாதுகாப்பு அமைச்சு விடுத்தது

கொழும்பு, ஒக்ரோபர் 13

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம், பிணைமுறி விவகாரம், ஊடகவியலாளர் தராகி சிவராம் படுகொலை உட்பட முக்கிய 7 சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு, பதில் பொலிஸ்மா அதிபருக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.**

இதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய பொலிஸ் பிரிவுகளுடன் இணைந்து செயற்படுமாறு அமைச்சு பதில் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் மரணம் மற்றும் 2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் செயற்பாட்டாளர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகநாதன் ஆகியோர் காணாமல் போனமை தொடர்பிலான விசாரணைகள் இதில் அடங்கும்.

மேலும், 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் கடத்தப்பட்டு, மறுநாள்

15

## அமைச்சர்களின் சொத்து விவரம் விசேட விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 13

முன்னாள் அமைச்சர்கள் பலருக்கு சொத்துக்கள் எவ்வாறு கிடைத்தன என்பது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, முன்னாள் அமைச்சர்களான அனுபா பாஸ்குவல் மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தொடர்பில் ஏற்கனவே நீதிமன்ற உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன.

இதுதவிர மகிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணதுங்க, ரோஹித அபேகுணவர்தன மற்றும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா

15

## வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை வைப்பிலிட்டோர் குறித்தும் கவனம்!

கொழும்பு, ஒக். 20

வெளிநாடுகளில் உள்ள வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் கோடிக்கணக்கில் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் 13 அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் குறித்து அரசாங்கத்தின் புலனாய்வு அமைப்புகள் விசாரணையை தொடங்கியுள்ளன.

இதற்கமைய, அந்த நிதி நிறுவனங்களிடம் இருந்து அது பற்றிய தகவல் அறிக்கைகளை பெறுவதுதான் முதல் நடவடிக்கை என்று புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாடுகளில் பணத்தை வைப்பிலிடும் முறைகள் குறித்து இந்த நாட்களில் சிறப்பு விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், புலனாய்வு

15

## 50 இற்கும் மேற்பட்ட பிரபல அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடாத முதலாவது சந்தர்ப்பம்

கொழும்பு, ஒக். 13

மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க, பாட்டலி சம்பிக ரணவக, விமல் வீரவன்ஸ போன்ற பிரபல அரசியல்வாதிகள் பலர் பொதுத் தேர்தலில் போட்டியிடாத முதல் சந்தர்ப்பம் இது வென தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக இந்த தேர்தல் தீர்மான மிக்கதாக மாறியுள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறினார்.

இம்முறை 50 இற்கும் மேற்பட்ட பிரபல அரசியல்வாதிகள் பொதுத் தேர்தலில் போட்டியிட வில்லை என ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

(அ)

## தமிழரசு செயலாளர் சத்தியலிங்கம் உடனடியாக பதவி விலகவேண்டும்!
### சிவமோகன் வலியுறுத்து

வவுனியா, ஒக். 13

கட்சியின் செயலாளர் பதவி என்பது பொறுப்பு மிக்கது எனவும், இன்று, அந்தப் பதவி, சில புல்லுருவிகளால் நாசமாக்கப் பட்டுள்ள தாகவும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கவலை வெளியிட்டார்.

நடந்த அனைத்தையும் ஏற்றுக்கொண்டு அவர் பதவி விலகவேண்டும் எனவும் சிவமோகன் குறிப்பிட்டார்.

தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய நிலை தொடர்பில், வவுனியாவில் உள்ள தனது இல்லத்தில் ஊடக சந்திப்பை நடத்திய வேளை அவர் இவ்வாறு

15

## அநுர அரசை உன்னிப்பாக அவதானிக்கும் தூதரகங்கள்!
### சீனா பக்கம் சாயுமா என கரிசனை

கொழும்பு, ஒக். 13

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையை இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக இராஜதந்திர வட்டாரங்களில் அறிய முடிந்தது.

15

## பாராளுமன்ற தேர்தலின் பின்னர் பல கட்சிகள் அநுரவுக்கு ஆதரவு!
### கொள்கைப் பிரச்னையால் கூட்டணி அமைக்கவில்லை

கொழும்பு, ஒக். 13

பொதுத் தேர்தலில் போட்டியிடும் பல கட்சிகள் தேர்தலுக்குப் பின்னர் அமைக்கப்படும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன.

15




## வல்லை பாலத்தில் விபத்து; வாகனம் மோதி ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம்-வல்லை பாலத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரே இவ் வாறு உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மருதடி, புலோலி மேற்கைச் சேர்ந்த துரைலிங்கம் மலைமகன் (வயது- 38) என அவரது உடைமையில் இருந்த

15

## ஜனாதிபதி - சமந்தா பவர் முக்கிய கலந்துரையாடல்

கொழும்பு, ஒக. 13

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் நிர்வாகி சமந்தா பவருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இணைய தொழில் நுட்பத்தின் ஊடாக கலந்துரையாடல் இடம்பெற்றது.

15

## சீரற்ற காலநிலை; 24,492 பேர் பாதிப்பு!
### உடன் நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி அநுர பணிப்புரை

கொழும்பு, ஒக். 13

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 11 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் 6,018 குடும்பங்களைச் சேர்ந்த 24,492 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பட்டியல் விவகாரத்தால் கட்சிகளுக்குள் பெரும் பிளவு!

கொழும்பு, ஒக். 13

முன்னாள் அமைச்சர்கள் பலர் தமது கட்சிகளின் தேசிய பட்டியல் உறுப்பினர் பதவியைப் பெறுவதற்கு கடும் முயற்சியில் ஈடுபட்டு வருவதனால், கட்சிகள் பிளவடைந்து - வீழ்ச்சியடையும் அளவுக்கு கருத்து மோதல்கள் அதிகரித்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய பட்டியல்களுக்கு கட்சித் தலைவர்களால் பரிந்துரைக்கப்பட்ட சிலரைக் கடுமையாக விமர்சிப்பதே, இந்த மோதல்கள் அதிகரிக்கக் காரணம் எனவும் அந்த வட்டாரங்கள் கூறின.

தேசிய மக்கள் சக்தியை தவிர்ந்த பெரும்பாலான கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் அமைச்சர்கள் இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடாமல் தேசிய பட்டியலுக்குள் நுழைய கடும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் கட்சிகளுக்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பல்வேறு காரணங்களால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என 30 இற்கும் மேற்பட்ட முன்னாள் அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

நிதிப் பிரச்னை, போட்டியிட்டு வெற்றி பெற முடியவில்லை என்ற உணர்வு, அரசியலில் ஏற்பட்ட ஏமாற்றம் ஆகியவையே, இவர்கள் பொதுத் தேர்தலில் போட்டி யிடாததற்குக் காரணம் எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ)



## பாதுகாப்பு செயலாளரை சந்தித்தார் சீனத் தூதுவர்

கொழும்பு, ஒக். 13

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தவை இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஜென்ஹோங் சந்தித்தார்.

கோட்டை சிறீ ஜெயவர்த்தனபுரவில் உள்ள பாதுகாப்புத் தலைமையக வளாகத்தில் வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது, தூதுவருடன் நினைவுச் சின்னங்களை பாதுகாப்புச் செயலாளர் பரிமாறிக் கொண்டார்.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் பத்மன் டி கோஸ்டாவும் கலந்துகொண்டார்.(எ)

# ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை பொதுத் தேர்தலில் பெறமுடியாது

## எரான் விக்கிரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13

"ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் அடுத்துவரும் அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்று விடமுடியும் என்று எண்ணுவது தவறான நிலைப்பாடாகும். கட்சிக்கு வாக்களிக்குமாறு கூறிவிட்டு, தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் யாரை பாராளுமன்றுக்கு அனுப்புவது என்று தலைமைப் பீடம் தீர்மானிப்பதற்கு இது சீனா அல்ல"- இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் கட்சியே ஆட்சியமைக்கும். வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை காணப்பட வேண்டும்.

அவ்வாறான அரசாங்கத்தை ஐக்கிய மக்கள் கூட்டணியால் உருவாக்க முடியும் என்று நம்புகின்றோம். ஜனநாயக நாடுகளில் ஜனாதிபதி ஒரு கட்சியிலிருந்தும், பிரதமர் பிறிதொரு கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்படுவது புதிய விடயமல்ல. அமெரிக்காவில் அடிக்கடி இவ்வாறு இடம்பெற்றுள்ளது. சில கட்சிகள் கட்சிக்கு வாக்களிக்குமாறு கூறுகின்றன. விருப்பத்தெரிவு குறித்து பேசுவதில்லை.

நாம் பிரதிநிதித்துவ அரசியலையே முன்னெடுக்கின்றோம். அது சர்வாதிகாரமல்ல. இது சீனா அல்ல. சீனாவைப் போன்று யாரை அங்கு நியமிப்பது என்று தீர்மானிக்க முடியாது. தமக்காக களமிறங்கும் வேட்பாளர்கள் யார் என்பதை அறிந்து மக்கள் தீர்மானிக்க வேண்டும். கட்சிக்கு வாக்களித்தால், ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஒருவரை நீக்கிவிட்டு பிறிதொருவரை நியமிக்கக் கூடிய வாய்ப்புக்கள் கூட காணப்படுகின்றன.

எனவே, எந்தக் கட்சியிலிருந்து எந்தப் பிரதிநிதியைத் தெரிவு செய்வது என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். சரியானவற்றைக் கூறும், அவற்றை செய்து காண்பிப்பவர்களையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும். அரசாங்கத்தின் சரியான தீர்மானங்களுக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்"- என்றார். (எ)

## மேல், தென் மாகாண வீதிகள் முடக்கம்

கொழும்பு, ஒக். 13

மேல் மற்றும் தென் மாகாணங்களில் வெள்ளம் காரணமாக பல வீதிகளில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதில் களுத்துறை மாவட்டத்திலேயே அதிகளவான வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பண்டாரகம - கொலமதிரிய, பாலிந்தநுவர - பதுரலிய, பரல்லாவிட்ட - அவிட்டாவ, களுத்துறை - மத்துகம, புலத்சிங்கள - மொல்கா ஆகிய வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

மேலும், மினுவாங்கொடை, கட்டான, ஹன்வெல்ல, கடுவெல, கொலன்னாவ, பன்னல, ஹோமாகம உள்ளிட்ட பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (எ)


## பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டில் நகைகள் மற்றும் பணம் திருட்டு!

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம் - நவாலி பகுதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டில் தங்க நகைகள் மற்றும் ஒரு தொகை பணம் என்பன நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளது.

வீட்டின் குளியலறை ஊடாக உள்நுழைந்த திருடர்கள், ஆறரை பவுண் நகை மற்றும் 29 ஆயிரம் ரூபாய் பணம் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)



## இ.போ.ச. பிராந்திய காரியாலயத்தில் வாணி விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஒக். 13

இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய காரியாலயம் நடத்திய வாணி விழாவும் ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை நிர்வாக உத்தியோகத்தர் அரங்கநாதன் தலைமையில் கோண்டாவில் பிராந்திய காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும், சிறப்பு விருந்தினராக இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய பிரதம முகாமையாளர் கே. கேதீசனும் கலந்து கொண்டனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த, சாதாரண தர பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்ற, உயர்தர பரீட்சையில் சித்தி அடைந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான, ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கௌரவிப்பு மற்றும் போக்குவரத்து சேவை ஊழியர்கள் வழங்கிய கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (அ)

## திருமலையில் தாயும் மகனும் ரயில் மோதி உயிரிழந்தனர்!

திருகோணமலை, ஒக். 13

திருகோணமலை, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தீவரகம பிரதேசத்தில் ரயில் மோதி தாய் மற்றும் மகன் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக் கிழமை மாலை இடம்பெற்றது.

சீனக்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய தாயும் 10 வயது மகனுமே உயிரிழந்தனர்.

தாயும் மகனும், தந்தை கொண்டு வந்த உணவுப் பொதியை வாங்கிக்கொண்டு ரயில் பாதையை கடக்கும் போதே கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி பலியாகினர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## வெள்ள அபாயம் குறித்து சிவப்பு எச்சரிக்கை


கொழும்பு, ஒக். 13


சீரற்ற வானிலை காரணமாக ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து வரும் நிலையில் களனி கங்கையை அண்மித்த தாழ் நிலப்பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

அத்துடன் களுகங்கையின் நீர்மட்டமும் வேகமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, குடா ஓயாவின் நீர்மட்டமும் அதிகரித்து வருவதுடன் அதனை அண்மித்த தாழ் நிலப்பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அத்தனகலு ஓயாவை அண்மித்த பகுதிகளுக்கும் வெள்ள அபாயம் குறித்து சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர் கந்தசுவாமி கோவில் நவராத்திரி கும்பபூஜை இறுதி நாளான நேற்றுக் காலை மானம்பூ உற்சவம் இடம்பெற்றது.
(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# மன்னார் ச. தொ. ச. மனிதப் புதைகுழி சான்று பொருட்கள் கொழும்பில் ஆய்வு?

மன்னார், ஒக். 13

மன்னார் ச. தொ. ச. மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் அன்றைய தினம் உரிய சான்றுப் பொருட்களை கொழும்பில் உள்ள நிறுவனங்களுக்கு கொண்டு சென்று ஆய்வு செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டத்தரணி வி. எஸ். நிரஞ்சன் தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணி நிரஞ்சன் மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பில் வினவிய போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை (ஒக். 7 - 11) வரை நடைபெற்றது. இதன் போது, மனிதப் புதைகுழியில் அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளோடு காணப்பட்ட வேறு பொருட்கள், பெட்டிகள், பொதி செய்யப்பட்டு நீதிமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

பல வருடங்களுக்கு பிற்பாடு, குறித்த ஐந்து நாட்களும் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரும், சட்ட மருத்துவ அதிகாரி குழுவும் மன்னார் நீதிவான் முன்னிலையில், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தினரும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக மன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளும் நீதிமன்ற அலுவலகர்களும் இணைந்து தரம் பிரித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது மனித எலும்பு தொகுதிகள் தனியாகவும், அதனுடன் எடுக்கப்பட்ட பிற பொருட்கள் தனியாகவும் பிரித்தெடுக்கப்பட்டு, பொதி செய்யப்பட்டு பாதுகாப்பாக நீதிமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விடயங்கள் சம்பந்தமாக மனித எலும்புகள் குறித்து சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையும், மீட்கப்பட்ட ஏனைய பொருட்கள் குறித்து களனி பேராசிரியர் ராஜ் சோமதேவவின் அறிக்கையையும் நீதிமன்றம் கோரியுள்ளது என்றும் அவர் கூறினார். (எ)

# 81 கிலோ கேரள கஞ்சாவுடன் பொலிஸாரால் இருவர் கைது

கிளிநொச்சி, ஒக். 13

81 கிலோ கேரள கஞ்சாவுடன் கிளிநொச்சியை சேர்ந்த நபர் உட்பட இருவர் வலஸ் முல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போவல பிரதேசத்தில் வைத்து வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி மற்றும் வலஸ் முல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 27 மற்றும் 42 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 81 கிலோ 690 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. (எ)

# சுழிபுரத்தில் கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் நேற்றுக்காலை கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இளவாலை பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் கசிப்பை எடுத்துச் சென்றவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# போதை மாத்திரைகளுடன் கடை உரிமையாளர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணத்தில் போதை மாத்திரைகளுடன் பலசரக்கு கடை உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் வைத்திருப்பதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல்படும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய யாழ்ப்பாணம் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தேடுதல் நடத்தினர்.

இதன்போது, மானிப்பாய் பகுதியில் பலசரக்கு வியாபார நிலையம் ஒன்றின் உரிமையாளர் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். தான் போதை மாத்திரைகள் பாவிப்பதாகவும், தெரிந்த நபர்களுக்கு விற்பனை செய்வதாகவும் அவர் கூறினார்.

அவருடை கடையின் பின் பகுதியில் பல போதை மாத்திரைகளும், வெற்று கவர்களும் இருந்தன. இந்த நிலையில் பொலிஸார் அவரை கைது செய்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ- 05)

## தென்னாபிரிக்க பழு தூக்கல் போட்டி

# சாவகச்சேரி புசாந்தனுக்கு மூன்று பதக்கங்கள்!




யாழ்ப்பாணம், ஒக். 13

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பழு தூக்கல் போட்டிகளில் சாவகச்சேரியைச் சேர்ந்த சற்குணராசா புசாந்தன் 3 பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டிகளில், 120 கிலோ எடைப் பிரிவில் டெட் லிவ்ட் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், பெஞ்ச் பிரஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், ஸ்குவாட்ஸ் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

சற்குணராசா புசாந்தன் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் பழைய மாணவனாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-05)

# பாரிசவாத தினத்தையொட்டி யோகக் கலை பயிற்சிநெறி!



யாழ்ப்பாணம், ஒக். 13

உலக பாரிசவாத தினத்தை முன்னிட்டு யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் உயர்தர பாடசாலையில் "யோகக் கலை மூலம் பாரிசவாதத்தை தடுப்போம்" என்ற தொனிப்பொருளில் யோக பயிற்சி நெறி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வடக்கு மாகாண பாரிசவாதத்துக்கு எதிரான செயல்பாட்டு குழுவின் தலைவி, நரம்பியல் மருத்துவ நிபுணர் அஜந்தா கேசவராஜ் நிகழ்வை ஆரம்பித்துவைத்து உரையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழக கல்லூரியின் பணிப்பாளர் மருத்துவர் விஜிதா பாரிசவாதத்தை யோகக் கலை மூலம் கட்டுப்படுத்துவது குறித்து உரையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அலகின் விரிவுரையாளர் கலாநிதி கு.கேதீஸ்வரனுடன் அவரின் மாணவர்களும் யோக பயிற்சியை செய்து காண்பித்தனர். இந்த நிகழ்வை யாழ். நீரிழிவுக் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். இதில், பாடசாலையின் அதிபர், ஆசிரியர் கள், மாணவர்கள் மற்றும் நீரிழிவு கழகத்தினர் பங்கேற்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை மாயை அலை குறித்து தமிழர்கள் விழிப்பாக இருக்கவேண்டும்

## ஜனநாயக தமிழ் அரசு வேட்பாளர் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஒக். 13

**தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற ஒரு மாயை தோற்றம், மாயை அலையாக இங்கே உருவெடுத்து இருக்கின்ற நிலையில் அதன் பாதகங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. அதற்காகத்தான் நாங்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றோம் என தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.**



யாழில் வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசிய அரசியலில் இதுவரை இல்லாதவாறு பன்னாட்டு நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை கொள்வனவு செய்து, பாராளுமன்றத்தில் தங்களுக்கு ஆதரவான தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான களங்களை திறப்பதற்கு ஆரம்பித்திருக்கின்றன.

அதனை வெளிப்படுத்த வேண்டிய தேவை எமக்குள்ளது. அதனடிப்படையிலும் நாங்கள் இந்தத் தேர்தலில் ஜனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பு என்ற ரீதியில் களமிறங்கியுள்ளோம்"- என்றார்.

(எ-05)

# விருப்புவாக்கு அடிப்படையில் வெற்றி பெற்றோர் தெரிவு

## மக்கள் சந்தேகமடைய தேவையில்லை

வவுனியா, ஒக். 13

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் விருப்புவாக்கின் அடிப்படையிலேயே வெற்றி பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். எனவே, அதில் மக்கள் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் வவுனியாவில் வேட்புமனு தாக்கல் செய்தனர். இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அந்த கட்சியினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

"அனைத்து இனங்களையும் உள்ளடக்கிய சக்தி மிக்க வேட்பாளர் அணி வன்னியில் களம் காண்கின்றது. அந்தவகையில் ஜனாதிபதியின் வழிகாட்டலில் ஊழல், மோசடி ஏனைய துஷ்பிரயோகங்கள் அற்ற நேர்மையான ஆட்சியை அமைப்பதற்கு நாங்கள் ஒன்று திரண்டுள்ளோம். மக்களின் ஆணைக்காக நாங்கள் காத்திருக்கின்றோம்.

மக்கள் ஆணையை பெற்று சமாதானமாக நிம்மதியாக வாழக்கூடிய ஒரு தேசத்தை கட்டியெழுப்புவோம். இதே வேளை, ஊழல் மோசடி பேர்வழிகளை நிராகரிக்க வேண்டும் என்று மக்களிடம் அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

ஜனாதிபதியின் பெயரைக் கூறி பல சுயேச்சைக்குழுக்கள் போட்டியிடுவதாக போலிப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அநுரவின் கையை பலப்படுத்தும் ஒரே கட்சி தேசிய மக்கள் சக்தி மட்டுமே.

அத்துடன் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் விருப்புவாக்கு முறைமை பார்க்கப்படாது என்று கூறுவது போலியான ஒரு கருத்துருவாக்கமே. இம்முறை விருப்பு வாக்கின் அடிப்படையில் தான் வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். அது தொடர்பில் எமது கட்சி செயலாளர் ரில்வின் சில்வாவும் தெளிவுபடுத்தியுள்ளார்.

எனவே, மக்கள் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. நிச்சயமாக கூடுதலான விருப்பு வாக்கை பெறுகின்ற வேட்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அவர்களே பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவார்கள்"- என்றனர்.

(எ)

# பொல்லால் தாக்கி மருமகன் கொலை மாமனார் கைது

கொழும்பு, ஒக். 13

பலாங்கொடை தஹமன பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மாமனார் தனது மருமகனை பொல்லால் தாக்கி கொலை செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றது.

பலாங்கொடை தம்மானே பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

சம்பவ தினத்தன்று கொலை செய்யப்பட்ட நபருக்கும் அவரது மனைவிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதம் எல்லை மீறியபோது கணவன், மனைவியை தாக்க முயன்றார். அப்போது மாமனார், மருமகனின் தலையில் பொல்லால் தாக்கி அவரை கொலை செய்ததாக பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து, சந்தேக நபரான 65 வயதுடைய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பிரதமர் ஹரிணியின் படங்களுக்கு முன் அனுமதி பெறப்பட வேண்டும்



கொழும்பு, ஒக். 13

அரச நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சர்களின் புகைப்படங்கள் மற்றும் செய்திகளைப் பயன்படுத்துவதற்கு எழுத்துபூர்வ முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, இது தொடர்பில் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் பார்வைக்கு இணங்க, பொது நிதியை உகந்த முறையில் பயன்படுத்துவதற்காகவே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பிரதமரின் புகைப்படங்கள் மற்றும் செய்திகளைப் பயன்படுத்தும் போது, பிரதமர் அலுவலகத்தில் எழுத்துபூர்வமாக முன் அனுமதி பெற வேண்டும்.

அத்துடன், அமைச்சர்கள் சார்பில் சம்பந்தப்பட்ட அமைச்சகத்திடம் அனுமதி பெற வேண்டும் எனவும் பிரதமரின் செயலாளர் தெரிவித்துள்ளார். அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் புகைப்படங்களைப் பயன்படுத்துவதற்கு இதுபோன்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# 100 கி. மீ. வேகத்தில் காற்று வீசும் மீனவர்களே கடலுக்கு செல்லாதீர்

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 13

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும், கொழும்பிலிருந்து காலி மற்றும் மாத்தறை முதல் அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகளின் உயரம் 2. 5 - 3. 0 மீற்றர் வரை உயரும் சாத்தியம் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மறு அறிவித்தல் வரை இந்த கடற்பரப்புகளுக்கு செல்ல வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் கடல்சார் மற்றும் மீனவர்களுக்கு எச்சரிச்கை விடுத்துள்ளது. (எ)

# நீந்த கற்றுக்கொடுக்கும் போது அனுபவம் இருப்பது அவசியம்

## டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக்.13

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு நான் சரியான வழிநடத்தலையும் வழிமுறையையுமே வழங்கி வருகின்றேன்.

அதனால்தான் எனது அனுபவமும் தூரநோக்குள்ள சிந்தனையும் இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது என ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஒருவருக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கும்போது அனுபவம் அருகில் இருப்பது அவசியம். அந்த சிறப்பான அனுபவம் எம்மிடம் இருக்கின்றது.

தற்போது மாற்றம் என்ற கருப்பொருளை மையப்படுத்தியே அநேகமானோர் பரப்புரைகள் செய்கின்றனர்.

குறிப்பாக மக்கள் விரும்பும் மாற்றம் என்பது அரசியல் மாற்றமாகவே இருக்கின்றது. அந்த மாற்றம் தற்போது மத்தியில் ஏற்படுள்ளது.

அந்தவகையில் தற்போது நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலிலும் அந்த மாற்றம் வரவுள்ளதாக கணிக்கப்படுகின்றது.

இதேவேளை, எமது வழிமுறையே சாத்தியமானது என்பதும் இன்று நிரூபணமாகியுள்ளது. அந்த அனுபவத்தினூடாகத்தான் இம்முறை மக்கள் மத்தியில் உருவாகியுள்ள அரசியல் மாற்றம் ஈ. பி. டி. பியின் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்தும் என நம்புகின்றேன்.

அதனால்தான் மத்தியில் உள்ள அரசாங்கத்தோடு ஆட்சியில் பங்கெடுப்பதற்கு பாராளுமன்றத் தேர்தல்களில் மக்கள் வழங்குகின்ற ஆணையின் பலமே அடிப்படையானது என வலியுறுத்தி வருகின்றேன் என்றும் அவர் கூறினார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பாளர்கள், பிரதேச பொறுப்பாளர்கள், கட்சி உறுப்பினர்களை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(எ-05)

# சுங்கத்தை ஏமாற்றி இறக்குமதியான சொகுசு வாகனம் அரசுடமையானது

கொழும்பு, ஒக். 13

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் பொறுப்பேற்கப்பட்ட சொகுசு ஜீப் ஒன்று அரசுடமையாக்கப்பட்டது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே இவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

போலியான தகவல்களை சுங்கத் திணைக்களத்தில் சமர்ப்பித்து அரசாங்கத்துக்கு 5 கோடியே 50 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான வரியை மோசடி செய்து இந்த வாகனம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பதுளை பிரதேசத்தை சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் இருந்த சொகுசு ஜீப் வாகனமே இவ்வாறு அரசுடமையாக்கப் பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
13.10.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், புரட்டாதி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பிரதான விடயத்தில் கவனம் கொள்ளுங்கள்

தேர்தல் என்றால் பொதுவாக ஒரு விடயம் மேலெழுவதுண்டு. தமிழ்த் தேசியம் பேசும் ஒவ்வொரு கட்சிகளும் மற்றவர்களை விமர்சிப்பதுண்டு - ஜனநாயக அரசியலில் ஆரோக்கியமான விமர்சனங்கள் அவசியம்தான். அதில் இரு வேறு கருத்தில்லை. ஆனால் அவ்வாறான விமர்சனங்கள் நாகரிகமாக இருக்க வேண்டும். தேர்தல் காலத்தில் அவ்வாறான நாகரிக வார்த்தைகளை காண்பது மிகவும் குறைவு. இது கடந்த கால அனுபவம். இதனால் நன்மையடைவது யார்? நிச்சயமாக எதிர்தரப்புக்கள்தான் நன்மையடைகின்றன.

இன்று ஜே.வி.பி அலை தொடர்பில் பேசப்படுகின்றது. ஆயுத கிளர்ச்சியின் மூலமாக அதிகாரத்தை கைப்பற்ற முடியுமென்னும் நம்பிக்கையில் இரண்டு முறை முயற்சித்து மோசமாக அழித்தொழிக்கப்பட்ட இயக்கம்தான் ஜே.வி.பி. ஆனால் அறுபது வருடங்களுக்கு பின்னரான அரசியல் நிலைமைகளால் அதிகாரத்தை கைப்பற்றக்கூடிய நிலையை அவர்கள் அடைந்திருக்கின்றனர். ஆட்சியில் இருந்த பிரதான கட்சிகளின் வீழ்ச்சியும் அதேவேளை பிரதான கட்சிகள் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டிருப்பதாலும்தான் ஜே.வி.பியால் அதிகாரத்தை கைப்பற்ற முடிந்திருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தியென்னும் பெயரில் அவர் எழுச்சியுற்றிருக்கின்றனர். இந்த எழுச்சி தமிழ் மக்களையும் பாதித்திருப்பதாக பலவாறான அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. தமிழ்ச் சூழலில் முன்வைக்கப்பட்ட கணிப்புக்கள் பெரியளவில் வெற்றி பெற்றதில்லை. எனினும் அவ்வாறான பார்வைகளை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. இந்தப் பின்புலத்தில் இந்த ஜே.வி.பி அலை உண்மைதானா என்று ஆராயவேண்டியது அவசியம்.

தமிழ் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது அடிப்படையில் தமிழர் அடையாளம். தமிழர் அடையாளத்தை பாதுகாக்க வேண்டுமாயின், அதனை ஒரு தென்னிலங்கை கட்சியின் ஊடாக மேற்கொள்ள முடியாது. தமிழ் அரசியல் கட்சிகள் மீது - குறிப்பாக அந்தக் கட்சிகளின் காலாவதியாகிப்போன அரசியல்வாதிகள் மீதுள்ள வெறுப்பின் காரணமாக அவ்வாறானதொரு முடிவை எடுத்தால், அது தமிழ் இன அடையாளத்தை பலவீனப்படுத்தும் தென்னிலங்கை நிகழ்ச்சி நிரலுக்கு வழிசமைப்பதாகவே அமையும். ஜே.வி.பி. அலை தொடர்பில் சிந்திப்பவர்கள் இந்த விடயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் இந்த விடயத்தை கருத்தில் கொண்டு செயற்படவேண்டும். தங்களுக்குள் சண்டையிடுவதை நிறுத்தவேண்டும். மக்களின் அதிருப்தியை புரிந்துகொண்டு அதற்கேற்று செயற்பட வேண்டும். மக்கள் தமிழ்த் தேசிய கட்சிகள் மீது கோபம் கொள்ளுகின்றனர் என்றால் அதன் பொருள், நீங்கள் சரியாக செயற்படவில்லை என்பதுதான். மக்கள் பிரதான அரசியல் தரப்புக்களிலிருந்து விலகிச் செல்வதற்கான அடிப்படையான காரணம் இதுதான்.

# மீளத் திறக்கப்பட்ட வீதிகளின் பாதுகாப்பு சாவடிகள் அகற்றம்

கொழும்பு, ஒக். 13

அலரி மாளிகைக்கு அருகில் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலில் இருந்து ரொட்டுண்டா சுற்றுவட்ட வீதிக்கு செல்லும் வீதி பொதுமக்களின் பாவனைக்காக மீண்டும் திறக்கப்பட்டதையடுத்து, வீதியின் இருபுறமும் இருந்த பாதுகாப்பு சாவடிகள் கொழும்பு மாநகர சபையால் அகற்றப்பட்டன.

கடந்த 2005ஆம் ஆண்டு முதல் பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த வீதி 19 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது.

இதனால், நீண்டகாலமாக பயணிக்க முடியாத நிலையில் காணப்பட்ட இந்த வீதியை தற்போதைய பாதுகாப்பு நிலைமையை ஆராய்ந்த பின்னர் மீண்டும் திறக்குமாறு புதிய அரசாங்கம் ஆலோசனை வழங்கியது குறிப்பிடத்தக்கது.(எ)

## புதிய ஜனநாயக முன்னணி புதிய யுக்தியில் பிரசாரம்

கொழும்பு, ஒக். 13

புதிய ஜனநாயக முன்னணியின் காலி மாவட்ட வேட்பாளர் மனுஷ நாணயக்கார, அரசியல் பிரசாரத்துக்காக உருவாக்கப்பட்ட இலங்கையின் முதலாவது தேர்தல் ஒலிப்புத்தகத்தை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்ற - பொதுத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளராக காலி மாவட்டத்தில் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகிறார்.

அவரது தேர்தல் பிரசாரத்தில் புத்தம் புதிய அணுகுமுறையில் ஒலிப்புத்தகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஒலிப்புத்தகம் எதிர்காலத்தில் டிஜிற்றல் ஊடகத்தளங்கள் மூலம் விநியோகிக்கப்படும். இது அவரது வாக்காளர்களை தொடர்பு கொள்ள மிகவும் திறமையான வழிமுறையாகும்.

இவ்வாறான சுற்றுச் சூழலை பாதிக்காத தொழில்நுட்பத்தை அரசியல் பிரசாரத்துக்கு பயன்படுத்துவது உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் வழமையாக காணப்படுகின்ற போதிலும் இலங்கையில் இவ்வாறானதொரு விடயம் காணப்படுவது இதுவே முதல் தடவையாகும். (எ)

# அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட 11 வீடுகள் மட்டுமே கையளிப்பு

கொழும்பு, ஒக். 13

கடந்த அரசாங்கத்தில், அமைச்சுப் பொறுப்புகளை வகித்து அரசாங்க வீடுகளில் வசித்த 31 அரசியல்வாதிகளில் 11 பேர் மாத்திரமே இதுவரை வீடுகளை கையளித்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

பொருட்கள், உடைமைகளை எடுத்துக் கொள்வது போன்ற பல சம்பிரதாயங்களை முடிக்க வேண்டியிருப்பதால், வீடுகளை கையளிப்பதில் தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கங்கள் அமைச்சர்களின் பாவனைக்காக கொழும்பு நகரில் வீடுகளை ஒதுக்கியிருந்தன. அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் அவற்றை மீளப்பெற்று வருகின்றது. (எ)

## நச்சுத்தன்மை வாய்ந்த ரின் மீன்கள் பறிமுதல்

கொழும்பு, ஒக். 13

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நச்சுத்தன்மை வாய்ந்த ரின் மீன்கள் ஒருகொடவத்தை சுங்க முனைய களஞ்சியசாலையிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மீட்கப்பட்ட ரின் மீன்களின் மொத்த பெறுமதி 215,000 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இந்த ரின் மீன்கள் சுற்றாடல், வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தியால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

"நச்சுத்தன்மை மிக்க ரின் மீன்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்த ரின் மீன்களை ஏற்றுமதி செய்த நாடுகளுக்கே மீண்டும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று செயலாளர் சந்திரகீர்த்தியால் கூறினார். (எ)

## இராணுவச் சிப்பாய் விபத்தில் உயிரிழப்பு


புத்தளம், ஒக். 13

புத்தளம் கற்பிட்டி பகுதியில் இருந்து பாலாவி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு கற்பிட்டி பாலாவி பிரதான வீதியின் கரம்பை பாலத்துக்கு முன்னால் இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

புத்தளம் புனர்வாழ்வு நிலையத்தில் கடமையாற்றி வந்த ஆனமடுவ தோனிகலைப் பகுதியைச் சேர்ந்த 35 வயது இராணுவச் சிப்பாயே இவ்வாறு உயிரிழந்தார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணைக் கண்காணிப்போம்! மண்ணைக் காப்போம்!

சு. முத்து

மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் செயற்கைக் கோள், ரஷ்ய நாட்டு ஸ்புட்னிக் 1957 ஒக்டோபர் 4 முதன்முதலாக விண்சுற்றி வந்ததும் விண்வெளி யுகம் ஆரம்பமானது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு 1967 அக்டோபர் 10 விண்வெளியை அமைதிப் பணிக்குப் பயன்படுத்தும் பன்னாட்டு ஒப்பந்தம் அறிவிப்பானது.

1999-இல் ஐ.நா. பொதுச்சபையின் தீர்மானம் "விண்வெளியின் அமைதியான பயன்பாடு என்ன?" என்ற தலைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"விண்வெளி அறிவியலையும் தொழில்நுட்பங்களையும் வளங்குன்றா மேம்பாட்டுக்கு அமைதியான வழிமுறைகளில் கையாளுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி ஆட்சியாளர்களுக்கும் குடிமக்களுக்கும் உலக அளவில் பொது நிகழ்ச்சிகள் நடத்தி விழிப்புணர்வை அதிகரிக்கச் செய்வதே" ஐ.நா.வின் நோக்கம்.

அக்டோபரின் இரண்டு சிறப்பு விண்வெளி நிகழ்வுகளையும் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 4 முதல் 10 வரை உலக விண்வெளி வாரம் உலகெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

உலக விண்வெளி வார அறிவிப்பின் வெள்ளி விழா ஆண்டு இது. 2024 ஆம் ஆண்டு உலக விண்வெளி வார நிகழ்வுகளுக்கு விண்வெளி மற்றும் காலநிலை மாற்றம்" என்று காலத்திற்கேற்ற கருப்பொருள் அறிவிக்கப்பட்டது.

"பூமியின் காலநிலையை கண்காணிப்பதிலும் காலநிலை மாற்றத்தைத் தணிப்பதிலும் விண்வெளி வகிக்கும் இன்றியமையாத பங்களிப்பினை வலியுறுத்துவோம்" என்கிறார் உலக விண்வெளி வார கழகத் தலைவர் டென்னிஸ் ஸ்டோன்.

அமெரிக்க நாட்டு டைரோஸ், நிம்பஸ், சோவியத் நாட்டு காஸ்மாஸ், ஐரோப்பிய விண்வெளிக் கழகம் செலுத்திய 'மீட்டியோசாட்', இந்தியாவின் 'இன்சாட்', ஜப்பானின் ஜஎம்எஸ் எனப்படும் ஜியோஸ்டேஷனரி



மீட்டிரியோலாஜிகல் சாட்டிலைட் (புவி நிலைவட்ட வானிலைச் செயற்கைக்கோள்) எனப் பல்வேறு நாடுகளும் பல்வேறு கட்டங்களில் இந்த வானிலை ஆய்வில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றன.

இந்த ஆண்டு (2024) விண்வெளி வார விழாவை ஒட்டி விக்ரம் சாராபாய் விண்வெளி மையமும் மாணவர்கள் முதியோர், ஆசிரியர்கள் என அனைத்துத் தரப்பிலான மக்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தது. தேசிய விண்வெளிக் கார்ட்டூன் போட்டி, தேசிய விண்வெளிக் குறும்படப் போட்டி, வரைபட நாவல்கள் உருவாக்கும் போட்டி போன்ற உற்சாகமான போட்டிகளுக்கான படைப்புகள் அனுப்பி வைக்க இறுதி நாள் அக்டோபர் 15 என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஏற்கெனவே கி.பி.1958 -ஆம் ஆண்டு அமெரிக்கா செலுத்திய எக்ஸ்புளோரர்-1 எனும் செயற்கைக்கோள் வளிமண்டலத்திற்கு அப்பால் விண்வெளியின் கதிர்வீச்சு வளையங்களை அணுகி ஆராய்ந்தது. சோவியத் யூனியன் 1964 ஜனவரி மாதம் எலக்டிரான்-1, 2' ஆகிய இரண்டு செயற்கைகோள்களைச் செலுத்தி இந்தக் கதிர்வீச்சு ஆராய்ச்சியில் ஈடுபட்டது.

சோவியத் ரஷியாவுடன் கொண்ட நல்லுறவின் விளைவால்- இந்தியா 'பாஸ்கரா-1' (7-6-1979) மற்றும் 'பாஸ்கரா-2' (20-11-1981) ஆகிய புவி, வளிமண்டல ஆய்வுக்கோள்கள் இரண்டினை விண்ணில் செலுத்திற்று.

இந்திய 'இன்சாட்' செயற்கைக்கோளில் பொருத்தப் பெற்று உள்ள அதி உயர் பகுதிறன் கதிரளவியின் உதவியினால் இந்திய வரைபடத்தின்மேல் மேக மூட்டங்கள் படர்ந்திருப்பதனை தினந்தோறும் தொலைக்காட்சி வழி பதிவிட்டு ஒளிபரப்புகிறார்கள்.

வானிலை அளப்புக்கென தானியங்கும் தரவு சேகரிப்பு மேடைகள் நிலப் பகுதியிலும் கடல்பகுதியிலும் நிறுவப்பெற்று உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் காற்றழுத்தம், காற்று வீசும் திசை, வேகம், வெயில், மழை, ஈரப்பதம், கடல்பரப்பின் வெப்பநிலை ஆகிய அளவீடுகள் பதிவாக்கப் பெறும்.

இன்சாட்-3டிஎஸ் செயற்கைக்கோள் 2014 பிப்ரவரி 17 அன்று ஏவப்பட்டது. அதனைச் சுமந்து சென்ற ஜி.எஸ்.எல்.வி.என்னும் புவி நிலைவட்டப்பாதைச் செயற்கைக்கோள் ஏவுகலனில் முதன்முறையாக 15 டன் எடை கொண்ட 'கிரையோஜெனிக்' (அதிகுளிர்த் திரவ) உந்துபொறி இடம்பெற்றது.

பூமியின் உள்கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய விண்வெளி வானிலை நிகழ்வுகளைக் கணிக்க சூரியனின் செயல்பாட்டினைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. நம் பூமிக்கு மிக அருகாமையில் இருக்கும் ஒரே ஒரு விண்மீன் சூரியன். நம்மில் இருந்து ஏறத்தாழ 15 கோடி கி.மீ.

தொலைவில் ஒளிர்ந்து கொண்டு இருக்கிறது. இதனைப் பகலவன், கதிரவன், ஞாயிறு, செங்கதிர்என்று எல்லாம் பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகிறோம். அன்றியும், நாம் கேட்காமலே நமக்கு ஆற்றலும் ஒளியும் வாரி வழங்கிக் கொண்டு இருக்கிறது.

சூரிய ஒளியில்தான் தாவரங்கள் பச்சையத்தின் உதவியால் காற்றிலுள்ள கரியமில வாயுவையும்இ நிலத்தில் இருந்து நீர்ச் சத்தையும் உறிஞ்சி 'கார்போஹைடிரேட்' எனும் மாவுப்பொருள் தயாரிக்கின்றன. பூமியில் இரவு - பகல், பருவ மாற்றங்கள் அனைத்துமே சூரியனின் உபயத்தால்தான். ●

## இந்தவார ராசிபலன் 13.10.2024 - 19.10.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 27
நல்ல நேரம்: 9.02 - 10.32 ராகு காலம் : 04.32 - 06.02 திதி : ஏகாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் தங்கள் சந்தோஷ தருணங்களை குடும்பத்தாரோடு கழித்து மகிழ்வீர்கள். அதன் காரணமாக குடும்பத்தில் குதூகலம் நிலவும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் கோலாகலமாக நிறைவேறும். கடைசியில் விருந்து, கேளிக்கைகளில் என மகிழ்ச்சியின் உச்சிக்குச் செல்வீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது வேலைச்சுமை அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். முன்பின் தெரியாதவர்கள் கூட உங்களுக்கு உதவ முன் வருவார்கள். மேடைப் பேச்சாளர்கள் அவர்களின் பேச்சு வன்மையால் வருமானம் அதிகரிக்கும். புதிய வியாபார தொடர்புகள் மூலம் இலாபம் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும், பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள். புதிய வியாபார தொடர்புகள் எதிர்பார்ப்புக்கு மேல் இலாபங்கள் குவியும். வருவாய் அதிகரிக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்களின் தேர்வு முடிவுகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லை. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. எனவே, கஷ்டங்கள் வந்தாலும் கலங்காதீர்கள். கேளிக்கை மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும். சுறுசுறுப்பற்ற நிலையில் காரியத் தடைகள் ஏற்படும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலை தூரம் பயணங்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். சீரான பொருளாதார நிலையால், மனதிற்குப் பிடித்த படி மனை, வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவை பெறுவர்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் வாக்கு வன்மை ஓங்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். வீடு, மனை ஆகியவை கிடைக்கும். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சுப காரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். சந்ததி விருத்தி ஏற்படும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். தொழிலில் எதிர்பார்த்தபடி வரவு அதிகரிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தாங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


இந்த வாரம் எதிர்பாராத தனவரவால் ஏற்றம் காண்பீர்கள். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். ஆயினும் முயற்சிகள் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும். சிலருக்கு உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் ஆகியோரின் ஒத்துழைப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலில் மக்கள் புகட்டிய பாடத்தினால் பாராளுமன்ற தேர்தலில் இருந்து ஒதுங்கிய பெருவாரியான அரசியல்வாதிகள்!





வீரகத்தி தனபாலசிங்கம்

நாட்டின் நலன்களில் உண்மையான அக்கறை கொண்டவர்களையும் பொது வாழ்வில் ஊழல் முறைகேடுகளுக்கு இடமளிக்காமல் தூய்மையைப் பேணவேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டவர்களையும் தங்களது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யவேண்டும் என்று முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு மக்கள் மத்தியில் அக்கறை அதிகரித்திருக்கும் ஒரு நேரத்தில் இந்த தடவை பாராளுமன்ற தேர்தல் நடைபெறவிருப்பது முக்கியமான ஒரு மாற்றமாகும்.

தவறான ஆட்சி முறையையும் ஊழல் முறைகேடுகளையும் ஒழித்து புதியதொரு அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கப்போவதாக வாக்குறுதி அளித்து ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவிடம் மக்கள் பெரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறார்கள்.

பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பழைய பிரதான அரசியல் கட்சிகளை நிராகரித்து எளிமையான குடும்பப் பின்னணியைக் கொண்ட ஒரு இடதுசாரி இயக்கத் தலைவரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவிக்குக் கொண்டு வந்ததன் மூலமாக மக்கள் வெளிக்காட்டிய மாற்றத்துக்கான வேட்கையை உரியமுறையில் புரிந்துகொண்டு தனது நிருவாகத்தை நடத்த வேண்டிய பாரிய பொறுப்பை ஜனாதிபதி திசாநாயக்க கொண்டிருக்கிறார். அவருக்கு முன்னால் உள்ள சவால்கள் மிகவும் பாரதூரமானவை.

பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு மகத்தான வெற்றியைத் தருவதன் மூலமாக உறுதியான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பைத் தரவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். பதவிக்கு வந்த பின்னரான மூன்று வாரங்களில் அவரது அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் ஊழலற்ற நிருவாகம் ஒன்றை நடத்துவதில் அவருக்கு இருக்கும் உறுதிப்பாட்டை வெளிக்காட்டுவனவாக அமைந்திருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தலில் திசாநாயக்கவுக்கு அளித்த ஆதரவையும் விட கூடுதலான ஆதரவை மக்கள் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வழங்குவதற்கு தயாராகிறார்கள் என்பதற்கான அறிகுறிகள் பெருமளவுக்கு தெரிகின்றன. தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்குமா இல்லையா என்ற வாதப் பிரதிவாதங்களும் மூண்டிருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் திசாநாயக்கவுக்கும் மற்றைய இரு பிரதான வேட்பாளர்களுக்கும் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் நோக்கும்போது தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை கிடைப்பது சாத்தியமில்லை என்று கூறியவர்களும் இருக்கிறார்கள். அதேவேளை, தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்தால் அது ஆபத்தாக அமையும் என்று வேறு சிலர் எச்சரிக்கையும் செய்கிறார்கள்.

ஆனால், தற்போதைய அரசியல் நிலைவரத்தை நோக்கும்போது தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா இல்லையா என்பது அவர்கள் சகல மாவட்டங்களிலும் நிறுத்தியிருக்கும் வேட்பாளர்களை மக்கள் எவ்வாறு நோக்குகிறார்கள் என்பதிலேயே பெருமளவுக்கு தங்கியிருக்கிறது.

கடந்த வெள்ளிக் கிழமையுடன் நியமனப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் நிறைவடைந்து விட்டன.

சிறந்த கல்வியையும் அனுபவத்தையும் கொண்ட ஊழலற்ற வேட்பாளர்களையே சகல தேர்தல் மாவட்டங்களிலும் தாங்கள் நிறுத்தியிருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி. ) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறினார்.

"நாம் களமிறக்கியிருக்கும் வேட்பாளர்களில் பெரும்பாலானவர்கள் இதுவரையில் அரசியலில் ஈடுபடாதவர்கள். புதிய பாராளுமன்றம் புதிய முகங்களையும் வித்தியாசமான அணியையும் கொண்டதாக அமையும். அவர்கள் மீது நம்பிக்கை வைக்குமாறு நாட்டு மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். எமதுவேட்பாளர் பட்டியல்கள் கல்விமான்களையும் தொழில்சார் நிபுணர்களையும் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்களையும் கொண்டதாக இருக்கின்றது" என்று அவர் மேலும் கூறினார்.

இதுவரையில் பொதுவெளியில் தெரிந்திராத புதுமுகங்கள் பெரும் எண்ணிக்கையில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருப்பதால் அவர்களுக்கு மக்கள் அமோக ஆதரவை வழங்குவார்களா என்ற கேள்வியும் எழவே செய்கிறது. ஆனால், இதுவரை காலமும் பதவிகளில் இருந்த அரசியல்வாதிகள் மீது மக்கள் கடுமையான வெறுப்படைந்திருக்கும் சூழ்நிலையில், புதியவர்களை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வதில் கூடுதல் முனைப்பை அவர்கள் காட்டுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் எனலாம்.



பொதுவாழ்வைத் தூய்மைப்படுத்துவதற்கு படிப்படியாக முன்னெடுக்கப்படவேண்டிய சவால்மிக்க பணிகளில் மக்கள் விவேகமான முறையில் தங்கள் பங்களிப்பை வழங்க கிடைத்திருக்கும் ஒரு நல்ல வாய்ப்பாக இந்த தடவை பாராளுமன்ற தேர்தல் அமைகிறது.

பொதுவாழ்வைத் தூய்மைப்படுத்தப் போவதாக சூளுரைத்திருக்கும் ஜனாதிபதி திசாநாயக்க மீதான நம்பிக்கையை வெளிக்காட்டும் முறையிலேயே மீண்டும் மக்கள் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். கடந்த காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் நடத்திய காடைத்தனங்களையும் மக்கள் மனதில் நிச்சயம் வைத்திருப்பார்கள். சபை நடவடிக்கைகளை பார்வையிடுவதற்கு பாடசாலை மாணவர்களை அனுமதிப்பதை சபாநாயகர் இடைநிறுத்திய ஒரு காலகட்டமும் இருந்தது.

மதுவுக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையானவர்கள் பிறகு அவற்றை உற்பத்தி செய்வதையே தொழிலாகக் கொண்டு பெரும்பணம் சம்பாதித்து இறுதியில் பாராளுமன்றத்திற்குள்ளும் வந்துவிட்டார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு தடவை கூறியது நன்றாக நினைவிருக்கிறது.

மக்கள் தங்களை நிச்சயம் நிராகரிப்பார்கள் என்ற பயத்தில் பல அரசியல்வாதிகள் இந்த தடவை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களில் முப்பத்தைந்துக்கும் அதிகமானவர்கள் மீண்டும் போட்டியிட முன்வரவில்லை. அதேவேளை, சிலர் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, சம்பிக்க ரணவக்கவின் ஐக்கிய குடியரசு முன்னணி போன்ற கட்சிகள் தேர்தலில் இருந்து முற்றாகவே ஒதுங்கிவிட்டன.

வயதுமுதிர்ந்தும் கூட அரசியலில் இருந்து ஓய்வுபெறவிரும்பாத சில அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, இளைய அரசியல்வாதிகள் சிலரும் கூட தங்களது கட்சிகளின் தேசியப்பட்டியலின் ஊடாக பாராளுமன்றத்துக்கு மீண்டும் வருவதற்கு தீர்மானித்திருக்கிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி பெருமளவில் புதிய வேட்பாளர்களை களமிறக்கியதால் ஏனைய அரசியல் கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்கள் தெரிவில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டன. ஆனால், பழைய பாரம்பரிய கட்சிகளினால் பெருமளவுக்கு புதியவர்களை களமிறக்கக்கூடியதாக இருக்கவில்லை. புதியவர்கள் அந்த கட்சிகளின் சார்பில் போட்டியிடுவதற்கு விருப்பத்தைக் காண்பிக்கவில்லை. அதனால் அந்த கட்சிகளின் வேட்பாளர் பட்டியல்கள் பெருமளவுக்கு பழைய முகங்களால் நிறைந்தவையாகவே இருக்கின்றன.

ஊழல் மிகுந்த அரசியல் கலாசாரத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு மக்கள் உறுதிபூண்டிருப்பதால் பாராளுமன்ற தேர்தலில் தரம்வாய்ந்த வேட்பாளர்களை களமிறக்காவிட்டால் பிரதான கட்சிகள் மக்களினால் முற்றாக நிராகரிக்கப்பட்டு வரலாறாகிவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது என்று சிவில் சமூக அமைப்புக்கள் ஏற்கெனவே எச்சரிக்கை செய்திருந்தன.

தேர்தல்களில் போட்டியிடுவதற்கு நேர்மையான வேட்பாளர்களை அரசியல் கட்சிகள் நியமிக்கவேண்டும் என்ற கோரிக்கை மக்களிடமிருந்து இப்போதுதான் வருகிறது என்றில்லை. முன்னரும் மக்கள் அவ்வாறே விரும்பினார்கள். ஆனால் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மக்களின் விருப்பத்தை மதிக்கவில்லை. பொதுவாழ்வுக்கு பொருத்தமில்லாதவர்களையும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களையும் அவர்கள் திரும்பத் திரும்ப வேட்பாளர்களாக நியமித்து பாராளுமன்றத்தின் தரத்தை குறைத்தார்கள்.

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலும் சில அரசியல்வாதிகள் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவானதை நாம் கண்டிருக்கிறோம். பணபலமும் அடியாள் பலமும் கோலோச்சுகின்ற அரசியலில் பழிபாவத்துக்கு அஞ்சாத அத்தகைய பேர்வழிகள் கட்சிகளின் தலைவர்களுக்கு தேவைப்பட்டார்கள். பாதாள உலகக் கும்பல்களுக்கு அரசியல் உயர்மட்டத்தில் செல்வாக்கு இருப்பதற்கு அதுவே அடிப்படைக் காரணம்.

நாட்டின் அதியுயர் சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தில் அண்மைக் காலத்தில் அங்கம் வகித்தவர்களில் பலர்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லப் போனால்... மகளிரால் மட்டுமே மதுவிலக்கு சாத்தியம்!

- எம். பாண்டியராஜன்

மிருந்த அரசியல் பரபரப்புகளுக்கு இடையே தொடங்கி, கூட்டணிக் கட்சிகள் பங்கேற்றதாக முடிந்திருக்கிறது விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மது - போதைப் பொருள் ஒழிப்புக்கான மகளிர் மாநாடு.

1971-ல் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட காலந்தொட்டு, 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் மது வுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பல்லாயிரக்கணக்கான தீர்மானங்களின் வரிசையில் வி.சி.க. மாநாட்டுத் தீர்மானங்களும் சேர்ந்துகொண்டிருக்கின்றன.

மது ஒழிப்பு மாநாட்டுக்கு அதிமுகவுக்கு வி.சி.க. அழைப்பு விடுத்ததும் பற்றிக்கொண்டது சலசலப்பும் விறுவிறுப்பும். ஆட்சியில் பங்கு பற்றிய பழைய விடியோவைக் கட்சித் தலைவர் திருமாவளவன் திடீரெனப் பகிர்ந்த போது கொஞ்சம் பதற்றமும் சேர்ந்து தோன்ற, 'பகிர்ந்தது நான் அல்ல, அட்மின்' என்று அதை நீக்கிவிட்டு, சில நாள்களில் மறுபடியும் அதையே அவரோ அல்லது அட்மினோ பதிவிட... ஊடகங்களுக்கு என்னவோ பெருந்தீனி.

ஆனால், கடைசியில் ஏதோவொரு சூர்யா படத்தில் மாடியிலிருந்து மாமனார், "என்னம்மா கீழே சத்தம்?' என்றதும் கீழே மனைவியிடம் சவுண்ட் விட்டுக்கொண்டிருந்த வடிவேலுவோ அப்படியே ட்டோனை மாற்றி 'சும்மா பேசிக்கிட்டிருக்கேன் மாமா' என்று பதில் கொடுப்பார். இந்தக் காட்சிக்கு நேரடியாகத் தொடர்பில்லாவிட்டாலும் இதே ரேஞ்சில்தான் வழக்கமான கட்சி மாநாடாக முடிந்திருக்கிறது விசிக மாநாடு.

'மது, போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக மகளிர் குழுக்கள் மூலம் பிரசாரம் மேற்கொள்ளவுள்ளோம்' என்ற திருமாவளவனின் பேச்சிலுள்ள ஒரு வரிதான் மாநாட்டின் செய்தி.

மதுக்கடைகளை எல்லாம் யார் திறந்தார்கள், யார் மூடினார்கள், யார், எதை, கள், சாராயக் கடைகள் - எப்போது திறந்தார்கள், மூடினார்கள்? தனியார் நடத்தியது எப்போது? டாஸ்மாக் வந்தது எப்படி? மதுக்கூடங்கள் வந்தது எப்படி? இவ்வாறான முடிவுகள், தகவல்கள் எல்லாமும் வரலாறு. இந்த முடிவுகளில் சம்பந்தப்பட்ட - முதல்வர்களாக இருந்த திமுக தலைவர் மு. கருணாநிதி, அதிமுக தலைவர்கள் எம். ஜி. ஆர்., ஜெயலலிதா ஒருவரும் இப்போது இல்லை. மீண்டும் மீண்டும் இவர்களையும் இவர்களின் முடிவுகளையும் இனிப் பேசிக்கொண்டிருப்பதில் பொருளுமில்லை பயனுமில்லை.


திமுகவோ, அதிமுகவோ - இப்போது இருப்பவர்கள் எல்லாருமே அதை நடத்திச் செல்பவர்கள்தான். இன்றைக்கு மது விற்பனை மூலம் மாநில அரசுக்குக் கிடைக்கும் ஆண்டு வருவாய் ரூ. 45,800 கோடி. ஆனால், மதுவால் சமுதாயத்தில் ஏற்பட்ட, ஏற்பட்டுக்கொண்டிருக்கிற உயிரிழப்புகளுக்கும் சீர்குலைவுகளுக்கும் குற்றங்களுக்கும் எவ்விதக் கணக்கு வழக்குமில்லை.

இந்த அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாருமே மனதார மதுவிலக்கை விரும்புகிறார்களா? ஆளும் திமுகவும் அடுத்த நிலையிலுள்ள அதிமுகவும் மதுவிலக்கு அமல் பற்றி என்ன நினைக்கின்றனர்?

உண்மையில் மதுவிலக்கில் அக்கறை கொண்டிருந்தால், மதுக் கடைகளை மூடுவது தொடர்பாகவும் இதனால் அரசுக்கு வந்துகொண்டிருக்கும் வருவாயை இழக்க நேரிடும்போது (வேறு வருவாய் மட்டுமல்ல, செலவுகளைக் குறைப்பதற்குமான) மாற்றுத் திட்டங்கள் பற்றியும் இவர்களிடம் என்ன யோசனைகள் இருக்கின்றன?

மதுப் பழக்கத்திலிருந்து மனமாற்றம் செய்வதன் மூலமும் பிரசாரம் செய்வதன் மூலமும் விழிப்புணர்வு பெற்று 'குடிமக்கள்' யாருமே மதுக் கடைகளுக்குச் செல்லாமல் புறக்கணித்துவிடுவார்கள், குடியை நிறுத்திவிடுவார்கள், விற்பனை அற்றுப் போய்விட்டால் தன்னைப் போல மதுக்கடைகளை அரசு மூடி விட்டுப் போய்விடும் என்றெல்லாம் யாராவது நினைத்தால் அல்லது எதிர் பார்த்தால் எவ்வளவு பெரிய அபத்தம்? பிரசாரம் மூலம் மாற்றம் என்பதெல்லாம் போகாத ஊருக்குச் சொல்கிற வழியைப் போலத்தான், மகாத்மா செய்யாத பிரசாரமா?

கெடுவினையாகத் தோற்றுப் போய்விட்ட 2016 சட்டப்பேரவைத் தேர்தலின் அறிக்கையில் மதுவிலக்கைக் கொண்டுவருவோம் என்று திமுக வாக்குறுதியளிக்க என்ன காரணம்? யார் காரணம்? மக்கள்... மக்கள்தான் காரணம்!



ஏனென்றால், அந்தத் தேர்தலுக்கு முன்னர்தான் மாநிலம் முழுவதும் மதுவுக்கு எதிராக மக்கள் கொந்தளித்துக் கிடந்தனர். மதுக்கடைகளுக்குள் மக்கள் புகுந்து நொறுக்கினர். பல இடங்களில் கடைகளைத் திறக்க விடாமல் செய்தனர். மதுவிலக்கை வலியுறுத்தி திமுகவே வீதிக்கு வந்து போராட்டம் நடத்தியது. தேர்தல் வாக்குறுதியாகவும் தெரிவித்தது.

அரசியல் கட்சிகளைப் பற்றிக் கவலைப்படாமல் மக்களே முன்னெடுத்து, இயக்கங்களை, போராட்டங்களை நடத்தினால் மட்டுமே - மதுவிலக்கைக் கொண்டுவர நினைக்காதவர்களை ஆதரிக்க மாட்டோம், வாக்களிக்க மாட்டோம் - என்று சொன்னால் அல்ல, உறைக்கும்படியாக உணர்த்தினால் மட்டுமே முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் அரசியல் கட்சிகள் தள்ளப்படுவார்கள்.

ஆண்டு முழுவதும் வற்றாமல் பெருகியோடிக்கொண்டிருக்கும் இந்த மது வெள்ளத்தால் பெருமளவில் பாதிக்கப்படுவது மக்கள்தொகையில் சரிபாதியான பெண்களே என்கிறபோது போராட்டங்களிலும் பெண்களுக்கே பெரும் பங்கு இருக்கிறது.

அரசு என்ற அதிகாரத்தின் முழு ஆசிர்வாதத்துடன் மனிதர்களையும் மனித விழுமியங்களையும் மரியாதையான வாழ்வையும், எதிர்காலத்துடன் சேர்த்துத் தின்று செரித்துக்கொண்டிருக்கும் இந்தக் கொடிய பூனைக்குக் கண்டிப்பாக மணி கட்டியே தீர வேண்டும்! யார் கட்டுவது? எப்படிக் கட்டுவது? எவ்வாறு கட்டுவது? நிச்சயம் வெறும் மாநாடுகளால் அல்ல!

**கொலைகாரத் தீபாவளி!**

இந்த ஆண்டு ஒக்டோபர் 31-தான் கொண்டாட்டத்துக்கான தீபாவளி! ஆனால், கொலைகாரத் தீபாவளியோ கடந்த ஓராண்டாகவே - 365 நாள்களாக - நடந்துகொண்டிருக்கிறது இஸ்ரேலின் தாக்குதலால் காஸாவில். சர்வம் வெடிமயம். இதுவரையில் கொல்லப்பட்டவர்கள் 43,687 பேர்!

கடந்த சில நாள்களுக்கு முன் ஒரு சின்ன டிவிஸ்ட். திடீரென இடையில் புகுந்த ஈரான், எதிர்பாராத தருணத்தில் திடீரென நடுத்தலையில் குட்டுவதைப் போல, இஸ்ரேலிலுள்ள மூன்று விமான தளங்களை நோக்கி சரமாரியாகத் துல்லிய ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியிருக்கிறது. இஸ்ரேல் எதிர் பார்த்திருக்க வாய்ப்பில்லை போல.

இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் எல்லாம் காஸாவில் லெபனானிலும் பெருமளவில் மக்கள் கொல்லப்படுகின்றனர். ஆனால், ஈரானிய ஏவுகணைத் தாக்குதலில் இஸ்ரேலில் மக்களுக்குப் பாதிப்பில்லாமல் ராணுவ நிலைகள் மட்டுமே தகர்க்கப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

தவிர, தொடர்ந்து இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலுக்குப் பதிலடிதான் இது. இதற்கு எதிரொலியாகத் தாக்கினால், மீண்டும் இஸ்ரேல் தாக்கப்படும் என்றும் ஈரான் எச்சரித்திருக்கிறது. இந்தப் போரில் தாங்கள் ஈடுபடப் போவதில்லை, தங்களுக்கு சம்பந்தமில்லை என்று பிரிட்டனும் பிரான்ஸும் அறிவித்துவிட்டன. வளைகுடா நாடுகள் பலவும் இந்தப் போரில் நடுநிலை வகிப்பதாகவும் தங்களுடைய நிலத்தையும் யாரும் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க மாட்டோம் என்றும் வெளிப்படையாகவே அறிவித்து விட்டன. ரஷியா, சீனா போன்றவை ஈரானுக்கு ஆதரவாக நிற்கின்றன.

எப்போதுமே இஸ்ரேலுக்கு ஆதரவாக இருந்துவரும் அமெரிக்காவின் நிலையில்தான் குழப்பம். இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அதிபர் பதவிக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், எந்த முடிவையும் யாரும் எடுக்க முடியாத தைப் போல சென்றுகொண்டிருக்கிறது.

ஈரானிலுள்ள எண்ணெய் வயல்களைத் தாக்கி அழிக்க முனைந்தால் வளைகுடா நாடுகளிலுள்ள அனைத்து எண்ணெய் வயல்களையுமே கொளுத்திவிடுவோம் என்று இஸ்ரேலுடன் அமெரிக்காவுக்கும் சேர்த்து எச்சரிக்கை விடுத்துள்ளது ஈரான். அதிர்ந்து கிடக்கும் இஸ்ரேலின் அடுத்தடுத்த நகர்வுகளைப் பொருத்திருக்கிறது இந்தப் போரின் போக்கு.

இப்படி உலகமே இரண்டாகப் பிரிந்துகிடக்கிறதே... ஒருகாலத்தில் மூன்றாவதாக ஒரு வலுவான சக்தி, அணிசாரா நாடுகள் என்றோர் அமைப்பு, இருந்ததே? நினைவிருக்கிறதா?

1955 ஏப்ரல் 18 முதல் 24 ஆம் தேதி வரை இந்தோனேசியாவிலுள்ள பாண்டுங் நகரில் நடைபெற்ற, பெரும்பாலும் ஆசியா, ஆப்பிரிக்காவிலிருந்து 29 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மாநாட்டில் வித்திடப்பட்டு, பஞ்சசீலக் கொள்கை அறிவிக்கப்பட்டு, 1961 செப். 1 - 6-ல் யூகோஸ்லாவியாவிலுள்ள பெல்கிரேட் நகர மாநாட்டில் முறைப்படி அறிவிக்கப்பட்ட அமைப்பு! இன்னமும் இருக்கிறது, பெயரளவில். இப்போது உகாண்டாதான் இதன் தலைவர்.

சீனா உள்ளிட்ட நாடுகளும் இடம் பெற்ற இதன் உருவாக்கத்திலும் நடத்திச் சென்றதிலும் இந்தியாவும் இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால் நேருவும் பெரும் பங்காற்றினர். அமெரிக்கா - சோவியத் சோசலிச குடியரசுகள் ஒன்றியம் ஆகியவற்றுக்கிடையே இரு முனைப்பட்ட பதற்றமான கெடுபிடிப் போர்ச் சூழலிலும் வலுவான மூன்றாவது சக்தியாகத் திகழ்ந்த அணிசாரா நாடுகள் அமைப்புக்கு என்னவானது? எங்கே சென்றது? ஏன்? என்ன - யார் காரணம்?

ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் செயலரையே உள்ளே வரக் கூடாது என்று இஸ்ரேல் அறிவித்திருக்கும் நிலையில் போரிட்டுக்கொண்டிருக்கும் வலுவான இந்த சக்திகளை யாரால் தட்டிக் கேட்க முடியும்? ம். இந்தியா என்ன சொல்கிறது என்று உலகம் எதிர்பார்த்த ஒரு காலமும் இருந்ததே!

இலங்கையில் தேர்தலில் வெற்றி பெற்றுப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அதிபர் அநுரகுமார திஸ்ஸநாயகவைக் கொழும்புக்குச் சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறார் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர். திஸ்ஸநாயக ஆட்சியமைத்ததும் இலங்கை செல்லும் முதல் வெளிநாட்டுத் தலைவர் என்ற 'பெருமை'யும், இந்தியாவையும் ஜெய்சங்கரையும் சேர்ந்திருக்கிறது.

தீரா தலைவலியாகத் தமிழ் மீனவர்களுக்குத் தொடரும் பிரச்சினை எப்போது தீரப் போகிறதெனத் தெரியவில்லை. இதுபற்றி ஜெய்சங்கர் பேசியிருக்கிறார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. டோக்கன் மாதிரி 50 மீனவர்களை இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்திருக்கிறது. இப்படியே இன்னும் எவ்வளவு காலத்துக்கு?

> தீரா தலைவலியாகத் தமிழ் மீனவர்களுக்குத் தொடரும் பிரச்சினை எப்போது தீரப் போகிறதெனத் தெரியவில்லை. இதுபற்றி ஜெய்சங்கர் பேசியிருக்கிறார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. டோக்கன் மாதிரி 50 மீனவர்களை இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்திருக்கிறது. இப்படியே இன்னும் எவ்வளவு காலத்துக்கு?

மராட்டி, வங்காளி, பாலி, பிராகிருதம், அசாமி ஆகிய நாட்டில் மேலும் ஐந்து மொழிகளுக்கு செம்மொழி தகுதி வழங்கி ஒப்புதல் அளித்திருக்கிறது மத்திய அமைச்சரவை!

மனிதன் பேசுகிற எல்லா மொழிகளும் நல்ல மொழிகளே.

பழைமைச் சிறப்பு உள்பட பல்வேறு தகுதிகளையும் கருத்தில்கொண்டு இந்தியாவில் 2004-ல் முதன்முதலில் தமிழ்தான் செம்மொழி என அறிவிக்கப்பட்டது. அடுத்து சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஒடியா எனத் தொடர்ந்தது. இப்போது மேலும் 5 மொழிகள் சேர்க்கப்பட்டு பட்டியலின் எண்ணிக்கை பதினொன்றாகியிருக்கிறது.

இதே வேகத்தில் சென்றால் அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்திய ரூபாய்த் தாளில் இடம் பெற்றிருக்கும் எல்லா மொழிகளுக்குமே செம்மொழித் தகுதி அறிவிக்கப்படலாம்!

'முகமது பின் துக்ளக்' திரைப்படத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்கள் எல்லாரும் அமைச்சர் பதவி கேட்பார்கள். பிரச்சினையே வேண்டாம் என அருமையான தீர்வை அறிவிப்பார் துக்ளக் - அனைவருமே உதவிப் பிரதம மந்திரிகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டகத்தின் உச்ச ஆட்டத்தில் 'வீடு' சின்னாபின்னமாகிறது!

## உருத்தாளர்கள் வெளியேற்றம்! தமிழரசை கடவுள் காப்பாற்றுவாரா?

பனங்காட்டான்

"தமிழர்களுக்கு ஏதாவதைக் கொடுத்து அவர்களை தனியாக விட்டுவிட்டால் அவர்கள் தங்களுக்குள்ளேயே அடிபட்டு போய்விடுவார்கள், நாங்கள் நிம்மதியாக இருக்கலாம்" என்று மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது தனக்கு நெருக்கமானவர்களுக்குச் சொன்னதாக ஒரு கதை உண்டு.

இந்தக் கதை உண்மையோ இட்டுக் கட்டப்பட்டதோ தெரியாது. ஆனால், இப்போது நடைபெறுபவைகள் அப்படித்தான் காணப்படுகின்றது. அடுத்த ஒரு மாதத்தின் ஒவ்வொரு நாளும் தேர்தல் பரப்புரை என்ற பெயரில் பல துகிலுரி படலங்களை தமிழர் தாயகம் பார்க்கப் போகிறது என்பது நன்றாகவே தெரிகிறது.

ஏழு பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்த யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் அடுத்த மாத பொதுத்தேர்தலில் ஆறு பேரை மட்டும் தெரிவு செய்யப் போகிறது. 23 அரசியல் கட்சிகளும், 21 சுயேட்சைக் குழுக்களும் மொத்தம் 396 அபேட்சகர்களை இங்கு களத்தில் இறக்கியுள்ளன. வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களிலும் இவ்வாறே ஏட்டிக்குப் போட்டியாக பல நூற்றுக்கணக்கானவர்கள் கட்சிகளிலும் சுயேச்சையாகவும் போட்டியிடுகின்றனர்.

தோழர் ஜனாதிபதி அநுர குமார திஸ்ஸநாயக்க, மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட நான்கு அரசியல் அணிகளும் முதன் முறையாக பொதுத்தேர்தல் ஒன்றில் யாழ்ப்பாணத்தில் களம் இறங்கியுள்ளன. தமிழ்த் தேசியம் என்ற பெயரிலுள்ள அரசியல் கட்சிகளுடன், ஜனநாயகம் என்ற பெயரைத் தாங்கிய தமிழ் அணிகள் பல இங்கு போட்டியிடுகின்றன.

இலங்கையை இதுவரை ஆட்சி புரிந்த ஐக்கிய தேசிய கட்சி, சிறீலங்கா சுதந்திர கட்சி, பொதுஜன பெரமுன ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட சுமார் நான்கு டசின் வரையான முன்னாள் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொதுத்தேர்தலிலிருந்து ஒதுங்கியுள்ளனர். தோல்விக்குப் பயந்து ஊழல்வாதிகளும் இனவாதிகளுமான அரசியல்வாதிகள் தேர்தலிலிருந்து பின்வாங்கியுள்ளனர் என்று அநுர குமாரவின் கட்சியைச் சேர்ந்த பிமால் ரத்நாயக்க தெரிவித்திருப்பது ஒருவகையில் உண்மைதான்.

முன்னாள் ஜனாதிபதிகளுள் இப்போது நாட்டில் இருப்பவர்களான மகிந்த, ரணில், மைத்திரி ஆகியோர் இம்முறை தேர்தலிலிருந்து விலகியுள்ளனர். கோதபாய மீண்டும் நாடு துறந்து ஓடிவிட்டார். மிகுதியான ராஜபக்ச சகோதரர்கள் மூவரும் (மகிந்த, சாமல், பசில்) போட்டியிடவில்லை. தோல்விப் பயம் காரணமாக நாமல் ராஜபக்ச பெரமுனவின் தேசியப் பட்டியலில் சேர்ந்துள்ளார்.

ஒரு காலத்தில் ஜே.வி.பி.யின் அட்டகாசத் தலைவராக இருந்துவிட்டு அதிலிருந்து வெளியேறி தனிக்கட்சி அமைத்து மகிந்தவுடன் கூட்டணி அமைத்து அமைச்சராகவிருந்த விமல் வீரவன்சவும் இம்முறை போட்டியிடவில்லை. தோழர் ஜனாதிபதி அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு ஆதரவளிக்கும் முகமாகவே தாம் தேர்தலில் போட்டியிடவில்லை என்ற விமலின் அறிவிப்பு இந்தத் தேர்தலின் அதியுச்ச நகைச்சுவை.



"தமிழரசின் கொள்கைகளைச் சுமப்போரை வெல்லச் செய்யுங்கள்" என்று அதன் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா விடுத்திருக்கும் வேண்டுகோள், தம்மை நாடி வந்து ஆசி பெற்றவர்களுக்கும் அவர்களது அணியினருக்கும் வாக்களிக்குமாறு கேட்பதை மறைபொருளில் தெரிவிக்கிறது. சுமந்திரனின் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்து வெளியேறியவர்களை தமிழரசின் கொள்கைகளைச் சுமப்பவர்கள் என்று மாவையர் மகுடம் சூட்டியுள்ளதுடன் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெல்லச் செய்யுங்கள் என்று மாவையர் தெரிவிக்கவில்லையென்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் முழக்கமிட்டவாறு கொள்ளைக்கார, ஊழல்கார அரசியல்வாதிகள் மீது இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற குரல் தெற்கில் ஆங்காங்கே கேட்க ஆரம்பித்துள்ளது. ராஜபக்சக்கள் மீது சுமத்தப்படும் ஊழல் குற்றச்சாட்டுகளை கண்டுபிடிக்குமாறு ஆளும் தரப்பிடம் சவால் விட்டுள்ளார் நாமல் ராஜபக்ச.

பொதுத்தேர்தல் முடிந்தவுடன் உள்ளூராட்சித் தேர்தலையும் நடத்துவதே தோழர் அநுர தரப்பின் திட்டம். சகல தேர்தல்களிலும் பெரும்பான்மையைப் பெற்றுவிட்டால், பின்னர் விரும்பும் எதனையும் இலகுவாகச் செய்துவிடலாம் என்பது இவர்களின் இலக்கு. அதுவரை, 'புலி வருகுது புலி வருகுது' என்ற அபாய எச்சரிக்கையுடன் நாட்களை கடத்துவார்கள். எதுவானாலும், முதல் ஒரு வருட ஆட்சியின் பின்னரே புதிய ஆட்சியாளர்களின் சுயரூபம் தெரிய வருமென்று சகல தரப்பினரும் காத்திருக்கின்றனர்.

மைய அரசியல் இவ்வாறு பயணித்துக் கொண்டிருக்கையில், தமிழர் தாயக அரசியல் வாலறுந்த பட்டம்போல குத்துக்கரணம் மட்டுமன்றி, பக்க வாட்டுக் கரணங்களையும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலானவர்கள் உருவாக்கிய தமிழரசுக் கட்சி இன்று மேய்ப்பனில்லாத மந்தைக் கூட்டமாக மாற்றுப்படுவதை தேசியத்தை நேசிக்கும் மக்கள் மனவேதனையுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

முன்னர் பலதடவை இப்பத்தியில் குறிப்பிட்டது போன்று கொழும்பிலிருந்து இறக்கப்பட்ட ஒட்டகம் தனது இலக்கைக் குறி தவறாது மேற்கொண்டு வருவதால், தமிழரசுக் கட்சி தமிழ் அழிவுக் கட்சியாக மாற்றப்பட்டுள்ளது. தமிழரசு என்ற கூடாரத்தை (வீடு), அந்த ஒட்டகம் தன்வயப்படுத்தி, சின்னாபின்னமாக்கி, எதேச்சாதிகாரமாக செயற்படுவதால் கட்சிக்காரர் பலர் விரக்தியோடும் வெறுப்போடும் அதிலிருந்து வெளியேறுகின்றனர். இந்த வெளியேற்றம் ஒரு தொடர்கதையாகி வருகிறது.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவில் தோல்வி கண்டவர், காயப்பட்ட பாம்பொன்று படம் எடுப்பது போன்று சுழன்று சுழன்று அடிக்கும் வேகத்தினால் கட்சியின் மூத்தவர்கள் பலர் ஓரம் கட்டப்படுகின்றனர்.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக தமிழரசுக் கொள்கையுடன் தம்மைப் பிணைத்துக் கொண்ட கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தமது பதவியிலிருந்தும் மற்றும் சகல பொறுப்புகளிலிருந்தும் ராஜினாமா செய்துவிட்டதாக அறிவித்துள்ளார். ஆனால், ராஜினாமா கடிதம் தமக்குக் கிடைக்கவில்லையென்று ஆயுட்கால பதில் செயலாளர் சத்தியலிங்கம் கூறுகிறார். (பதில் செயலாளர் பதவி ஆண்டாண்டு காலமாக தொடருவது கூட கட்சியின் யாப்பு விதிகளுக்கு முரணானது என்று நீதிமன்றம் செல்வதற்கு ஒரு தரப்பு முயற்சிக்கிறது).

மாவை சேனாதிராஜா அவர்களின் ராஜினாமா கடிதம் புதிய தலைவராக தெரிவாகியும், அப்பதவியை ஏற்க முடியாதிருக்கும் முன்னாள் எம்.பி. சிவஞானம் சிறீதரனுக்கு அனுப்பப்பட்டது என்ற விடயம் ஏனோ கட்சிக்காரர்களால் மூடுமந்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த பொதுத்தேர்தலில் தமது வெற்றிக்காக சிவஞானம் சிறீதரனின் தோளில் கைகளைப் போட்டவாறு வாக்குகளைப் பெற்ற சுமந்திரன் (இவரது வெற்றி சசிகலா ரவிராஜை அப்புறப்படுத்தி பெற்றதாக அன்றிலிருந்து இன்றுவரை சொல்லப்பட்டு வருகிறது), இம்முறை முன்னைய தேர்தல்களைவிட அதிகூடிய வாக்குகளைப் பெறவேண்டுமென்பதற்காக தமக்கு நெருக்கமானவர்களை வேட்பாளர் பட்டியலில் இணைத்துக் கொண்டதாக பகிரங்கமாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிடுபவர்களுள் ஒருவரான சுமந்திரன் வேட்பாளர் தெரிவுக்குழுவில் இடம்பெற்றதாகவும், அக்குழுவில் இவருக்கு சாதகமானவர்களே கூடுதலாக இருந்ததாகவும் கொழும்புக் கிளையின் தலைவர் சட்டத்தரணி தவராஜா தெரிவித்துள்ள குற்றச்சாட்டை இதுவரை எவரும் மறுக்கவில்லை.

சிவஞானம் சிறீதரனை வேட்பாளர் பட்டியலில் சேர்க்க சுமந்திரன் எதிர்ப்புக் காட்டியே வந்தார். ஆனால், கட்சியின் மூத்த துணைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஒரு தீர்மானமாக சிவஞானம் சிறீதரனை இணைப்பதை நிறைவேற்றிவிட்டதால் அதனை ஏற்க வேண்டிய கட்டாயம் சுமந்திரனுக்கு ஏற்பட்டது.

இறுதியில், வேட்பாளர் பட்டியலை தேர்தல் அதிகாரியிடம் ஒப்படைப்பதற்கு அனைவரும் ஓரணியாகச் சென்ற போது சிறீதரனிடம் அந்த ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டது. அவரை பட்டியலின் முதன்மை வேட்பாளர் என்று கூறி அவரூடாக பட்டியலைக் கையளிக்கச் செய்ததுகூட சுமந்திரன் அரங்கேற்றிய ஒரு குறுநாடகம்.

இந்த நாடகத்தில் பலிக்கடாவான சிறீதரன் வேட்பாளர் பட்டியலை கையளித்த கையுடன் நேரடியாக மாவை சேனாதிராஜா இல்லம் சென்று அவர் பாதம் தொட்டு வணங்கி ஆசி பெற்றதை சுமந்திரனால் ஏற்றுக்கொள்ள முடியாது. பார்க்கப் போனால் மூத்த தலைவர் சம்பந்தனின் இடத்துக்கு மாவை சேனாதிராஜாவை சிறீதரன் உயர்த்திவிட்டாரென்றே சொல்ல வேண்டும்.

சுமந்திரனால் பழிவாங்கப்பட்ட சட்டத்தரணி தவராஜா, முன்னாள் எம்.பி. ஈஸ்வரபாதம் சரவணபவான் மற்றும் பொ.ஐங்கரநேசன் உட்பட ஓர் அணி ஜனநாயக தமிழரசுக் கட்சி என்ற பெயரில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுகின்றது. இதுகூட சுமந்திரனால் வந்த வினையே. இவர்களது சின்னம் மாம்பழம். வேட்பாளர் பட்டியலை சமர்ப்பித்த பின்னர் தவராஜாவும் சரவணபவனும் மாவை சேனாதிராஜாவின் இல்லத்துக்கு மாம்பழங்களை எடுத்துச் சென்று ஆசி பெற்றுள்ளனர்.

சுமந்திரனால் தூக்கி வீசப்பட்ட சசிகலா ரவிராஜ் (மாமனிதர் ரவிராஜின் மனைவி), சித்தார்த்தன் - செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தலைமையிலான ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் இணைந்து போட்டியிடுகின்றார். இவ்வகையான எதிர்பாராத நம்ப முடியாத பல திருப்பங்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் மாவை சேனாதிராஜா மிகச் சுருக்கமாக விடுத்திருக்கும் வேண்டுகோள் ஒன்று முக்கியமானதாக நோக்கப்பட வேண்டியது.

"தமிழரசின் கொள்கைகளை சுமப்போரை வெல்லச் செய்யுங்கள்" என்ற இந்த வேண்டுகோள் தம்மை நாடி வந்து ஆசி பெற்றவர்களுக்கும் அவர்களது அணியினருக்கும் வாக்களிக்குமாறு கேட்பதை தெரிவிக்கிறது. சுமந்திரனின் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்து வெளியேறியவர்களை, தமிழரசின் கொள்கைகளைச் சுமப்பவர்கள் என்று மாவையர் மகுடம் சூட்டியுள்ளார். தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெல்லச் செய்யுங்கள் என்று மாவையர் தெரிவிக்கவில்லையென்பதை இங்கு கவனிக்க வேண்டும்.

இதனை நேர்படச் சொல்வதானால், தமிழரசுக் கட்சியை பிளவுபடுத்தி சுமந்திரன் அணி என்ற பெயரில் தேர்தலில் போட்டியிடுபவர்களை ஆதரிக்க வேண்டாமென்று மாவையர் கேட்டிருப்பது வெளிச்சமாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையின் தாற்பரியம்!

- மாலி

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நல்லூர் உற்சவ காலத்தில், இந்திய துணைத்தூதரகத்தின் அநுசரணையுடன் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்ற நடன நிகழ்ச்சியொன்றுபற்றி எழுதுகையில், 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற மஹாகவியின் அந்த அழியா வரி, மனதில் கிளர்ந்தது. கலா ரம்மியம் நிறைக்கும் யாழ் கலாசார மண்டபத்தில் அண்மையில் பார்த்த இரு நடன நிகழ்ச்சிகள், அப்போது எழுதிய அந்த வரிகளை இப்போது நினைவில் மீட்டன.

நினைந்தோ நினையாமலோ 'இருடசின்' பேராக, இருபத்து நான்குபேர் பங்குபற்றியிருந்த திருமதி பிரியதர்சினி வாகீசனின் நர்த்தனஷேத்திரா நடன நிகழ்ச்சிக்கு பின்னர், திருமதி பத்மினி செல்வேந்திரகுமாரின் மாணவி ஒருவரின் பரதநாட்டிய அரங்கேற்றம், முதல் பார்த்த நிகழ்ச்சியை வழிமொழிவது போல் இருந்தது.


அலாரிப்பிலிருந்து தில்லானா வரை ஒரு மார்க்கம், ரசிப்போடு திட்டமாக வெளிப்பட்டது. நேர்த்தியான அடவுகள், அபிநய முத்திரைகள், அமைவான முகபாவம் அவையை எளிதாய் ஈர்க்க வைத்தன.

நன்கு தேர்ந்த உருப்படிகள். ஒரு பரத நாட்டிய நிகழ்ச்சியில் அவையினரை பரிச்சயத்துடன் ஒன்றவைக்கும் விதத்தில் இருந்தன. லால்குடி ஜெயராமனின் "அங்கயற்கண்ணி ஆனந்தம் கொண்டாளே..." நவராக வர்ணம், பைரவியில் அருணாசல கவிராயரின் "யாரோ இவர் யாரோ..." பதம்.

அன்னை மீனாட்சியின் வாயில், திருவிளையாடல் காட்சிகளிலிருந்து நவரசங்களை சஞ்சாரி பாவங்களில் வெளிப்படுத்த லால்குடியின் இந்த வர்ணம் நர்த்தகிக்கு அலாதி வாய்ப்பளிக்கிறது. தன்னுடைய வித்துவ மேதமையைச் சாற்றுகின்ற ஒன்றாக லால்குடி ஜெயராமன் அமைத்த வர்ணம் இது.

மிதிலையில் கன்னி மாடத்தில் சீதையைக் கண்ணுற்று, 'யாரோ இவர் யாரோ...' என்று மயங்கும் இராமன்.

நம்முடைய பரிச்சயத்தின் எதிர்பார்ப்பை இவற்றிலெல்லாம் அரங்கேற்ற செல்வியான யதுர்ஷினி குணசேகரன் அநாயாசமும் லாவகமுமாக நிறைத்தார். பார்ப்பதற்கு மாத்திரமன்றி, கேட்பதற்கும் இனிதான ராக உருப்படிகள் இவை. அந்த இனிமையும் சேர்ந்திருந்தது.





நீண்டகால பயிற்சியும் அர்ப்பணிப்பான ஈடுபாடும் எளிதாகவே புலப்பட்டன. பத்மினி, யாழ்ப்பாணத்து நடன அரங்கில் தன் முத்திரையைப் பதித்த ஒருவர். அந்த முத்திரையை அவர் தன்னுடைய சிஷ்யையிடம் பதித்திருப்பது அவ்வப்போது தெரிந்தது. யதுர்ஷினியின் கலைப் பின்புலத்தையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட நா. சண்முகலிங்கன் உணர்த்தினார்.

அது சரி, யாழ்ப்பாணத்தின் மீண்டும் தொடங்கும் மிடுக்கில் இந்த அரங்கேற்றம் ஒரு 'நெருடலை'யும் தந்தது. இப்போதெல்லாம் சென்னை இசை விழாவில் கிருஷ்ணகான சபாவின் நாட்டிய மாநாடும் பிரதானமானது. இது முதன்முதலாக 1981இல் தொடங்கியது. அப்போது அந்த முதல் மாநாட்டின் அமைப்பாளர் டாக்டர் பத்மா சுப்ரமண்யம். அண்மையில் காலமான நாட்டிய கலைஞர் சி. வி. சந்திரசேகருக்கு கிருஷ்ணகான சபாவின் அந்த ஆண்டுக்கான 'நிருத்திய சூடாமணி' விருது வழங்கப்பட்டது.

சந்திரசேகரும் மாநாட்டில் கலந்துகொண்டார். மண்டபம் நிறைந்திருந்த நாட்டிய ஆச்சாரியர்கள், கலை விற்பன்னர்கள், இந்தியாவில் நமக்கு தெரிந்த மிகப் பிரபலமான நடன கலைஞர்கள், விமர்சகர்கள், அறிஞர்கள் இருந்தார்கள். சிலரைச் சொல்வதானால், வழுவூர் இராமையாபிள்ளை, முத்து சாமிப்பிள்ளை, சொக்கலிங்கம்பிள்ளை, பாலசரஸ்வதி, ருக்மிணி அருண்டேல், பிர்ஜூ மகராஜ், சம்யுக்தா பாணிக்கிரகி... இப்படி இன்னும், கபிலா வாத்ஸ்யாயன், விமர்சகர் சுப்புடு, சுனில் கோத்தாரி, ஆருத்ரா இவர்களோடு நம்முடைய சிவத்தம்பியும் இருந்தார்.

சந்திரசேகர் பரோடா பல்கலைக் கழகத்தில் பரதநாட்டிய துறைத் தலைவராகவிருந்தார். "பாருங்கள், தமிழ் நாட்டு கலையான பரதநாட்டியத்துக்கு தமிழ்நாட்டு பல்கலைக்கழகங்கள் எவற்றிலும் இடமில்லை. ஆனால் பரோடாவில் இருக்கிறது" என்று, ஆதங்கத்தையும் பெருமையையும் வெளிப்படுத்தி பத்மா சுப்ரமண்யம் பேசினார்.

"யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருக்கிறது" என்று, எழுந்து குறுக்கிட்டுச் சொன்னேன். அரங்கை கரகோஷம் நிறைத்தது. 'ஈழநாடு' சார்பில் சென்றிருந்தேன்.

'...உழைத்த பின் ஆறி, கலைகளில் ஊறிச் சிறந்த' யாழ்ப்பாணத்துக்கு இக் கலைகளில் பல்கலைக்கழகம் வரம்தானே?

சலங்கை பூசையை நிகழ்த்திய இணுவில் மகாதேவா குருக்களின் புதல்வர் சோமசுந்தர சர்மா, அரங்கேறும் செல்விக்கு மேடையில் அளித்த ஆசி உரையையும், கௌரவ விருந்தினர் ஒருவராக கலந்துகொண்ட யாழ் பல்கலைக்கழக நடனத் துறைத் தலைவர் செல்வி மைதிலி அருளையாவின் உரையையும் கேட்டபோது, முன்னையது யாழ்ப்பாணத்தின் 'ஊறிச் சிறந்த' கலையையும், மற்றையது இப்போது பல்கலைக்கழக கலையையும் சாற்றியதா?

கலையின் தாத்பரியம் என்பது என்ன? அது எங்கே?

அரங்கேற்றத்தில் ஒன்பதுபேர் உரையாற்றினார்கள். யதுர்ஷினி அளித்த நடன உருப்படிகள் எட்டு. ஆடை மாற்றம் ஏற்படுத்தும் அநர்த்தம் இது என்று நிகழ்ச்சியை தொகுத்தளித்த திருலலீசனின் விளக்கத்திலிருந்து தெரிகிறது.

நால்வகை அபிநயங்களில் ஆகார்ய அபிநயமும் ஒன்றுதான். ஆனால், அது அடிக்கடி ஆடையை மாற்றுவதல்ல. ஐந்து மணித்தியாலங்களுக்கு மேல் ஆகியிருந்தபோது, இரண்டரை மணித்தியாலங்களில் யதுர்ஷினியின் அரங்கேற்றத்தை இன்னமும் மேலாக, களையுடன் நுகர்ந்திருக்க முடியும். இது, இப்போது யாழ்ப்பாணத்தில் வழக்காகிறதுபோல தெரிகிறது. ஆனால், நிச்சயம் மாறவேண்டும்.

தவநாதன் றொபேட், நடனத்துக்கு பாவங்களோடு, நல்ல பாடகர். இன்னமும் பாட வல்லவர்.

மிருதங்கத்தில் சின்னராசா துரைராசாவின் அநுபவத்துடனான பக்குவமான வாசிப்பு. சற்று மேலான மிருதங்க அழுத்தம், நட்டுவாங்கத்துக்கு அநுசரணையளிக்கும். வயலினில் ராகங்களைக் கோடி காட்டினார் வேலதீபன். பத்மினியின் இயல்பான நட்டுவாங்கம்.

இசையில் நடனத்தில், உருப்படிகளின் சாகித்தியகர்த்தாக்கள் இப்போது வேண்டாதவர்களா? எத்தனையோ பக்கங்களில், எவ்வளவோ செலவில் அச்சிடப்படும் அரங்கேற்ற மலரில் இவையெல்லாம் இல்லாமல் போகின்றன.

தாத்பரியம் மிடுக்காகவேண்டும். •

# சிறுபான்மை சமூகங்களை மறந்தனவா தமிழ்க் கட்சிகள்?

மரியாம்பிள்ளை வரதராஜன்

1970 ஆம் ஆண்டு எம்.சி.சுப்பிரமணியம் அவர்களுக்குப் பின் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதி எவரும் பாராளுமன்றத்தில் இருக்கவில்லை என்றும் அதுவும் அரசாங்கக் கட்சியின் தேசியப்பட்டியல் மூலமே அவர் வர முடிந்தது என்றும் சாரப்பட ஒருவர் காணொளியில் தோன்றிப் பகிர்ந்திருந்தார்.

அவர் காணொளிகளில் குறிப்பிட்டது போல அந்தக் காலத்தில் தேசியப் பட்டியல் முறை இருக்கவில்லை. நியமன எம்பி முறை பழைய அரசியலமைப்பிலிருந்தது.

செல்லையா குமாரசூரியர், எம்.சி. சுப்பிரமணியம், பதியுதீன் மஹ்மூத் போன்றோர் நியமன எம்பிக்களாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐக்கிய முன்னணி அரசில் நியமனம் பெற்றவர்கள்.

அவர் சொன்ன "தாழ்த்தப்பட்ட மக்கள்" என்ற பதத்தை நான் இங்கு பாவிக்க விரும்பவில்லை. "சிறுபான்மை சமூகங்கள்" என்று அதனை இப்பதிவில் சில தகவல்களைச் சொல்வதற்காகக் குறிப்பிடுகிறேன்.

1977 தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வேட்பாளர்களில் ஒருவராக உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய அமரர் த. இராசலிங்கம் அவர்களை உடுப்பிட்டித் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தியது.

"சாதிப் பெருமையும் தடிப்பும்" மிக்க தொகுதியாகக் கருதப்பட்ட உடுப்பிட்டி யில் இராசலிங்கத்தை நிறுத்தி தமிழ் மக்கள் தங்கள் விடுதலையை அடைவதற்காக எல்லா வேறுபாடுகளையும் மறந்து ஒற்றுமையாகத் தங்கள் ஆணையைத் தருகிறார்கள் என்று காட்ட இராசலிங்கத்தை வெற்றியடையச் செய்யுமாறு கூட்டணித் தலைவர்கள் இளைஞர் பேரவையினர் மேடைகளில் ஏறிப் பிரசாரம் செய்தனர்.



மூத்த பத்திரிகையாளர் ஒருவர் தமது வீட்டுக்கருகில் இராசலிங்கம் அவர்கள் கரவெட்டிக்கு வாக்குக் கேட்டு வந்தபோது ஒரு வீட்டில், அங்கிருந்த மூதாட்டி பேசிய கொடும் வார்த்தைகளைச் சொல்லி விசனப்பட்டார். அந்த மனுசியின் கடும் சொற்களை விட இராசலிங்கத்தைக் கல்லால் எறியலாமடா. அது காயம் குறைந்ததடா -என்றார்.

அந்த "மனுசி" ஒன்றுமே படிக்காதது. ஆனால் இராசலிங்கம் ஒரு எம்.ஏ முதுமாணி. கொழும்பு சென்.ஜோசப்பில் கற்று அங்கு ஆசிரியராகி உதவி அதிபராகி கல்வி அதிகாரியான ஒருவர். நிலைமையைப் பார் என்றார் கவலையுடன். கூட்டணி இப்படியான எதிர்ப்புகளின் மத்தியில் தான் உடுப்பிட்டித் தொகுதி யில் அவரை நிறுத்தியிருந்தது.

அந்தப் பெண்ணின் அறிவும் வாழ்ந்த சூழலும் அந்தளவுந்தான் என்று தவிர்த்தாலும், 1977 தேர்தலின் போது முற் போக்கானவர்கள் என்று சமூகத்தில் மதிக்கப்பட்ட சமசமாஜியான ஆர்.ஆர் தர்மரத்தினமும் கே.சி மகாதேவனும் இராசலிங்கத்துக்கு எதிராகப் போட்டியிட்டனர்.

இதையும் விட, சிறுபான்மைத் தமிழர் மகாசபை போன்ற இயக்கங்களுடனும் சிறுபான்மை சமூகங்களுக்கான போராட்டங்களுடனும் தொடர்புடைய அமரர் எஸ்.எஸ். சுந்தரமும் பிள்ளையினாரும் இராசலிங்கத்துக்கு எதிராகக் கேட்டார்கள்.

அமரர் சுந்தரம் பிரசாரத்தின்போது இராசலிங்கம் அல்ல, தான்தான் அவரை விட இன்னும் தாழ்ந்தவன் என்றும் பேசினார்.

தொழிற்சங்கவாதியான கே.சி மகாதேவனும் தமிழீழம் ஒரு கனவு என்று கூட்டணிக்கு எதிராகக் கேட்டார். இராசலிங்கத்துக்கு தாம் எதிரல்ல என்றார்.

ஏனைய தொகுதிகளை விட உடுப்பிட்டியில் அதிக வேட்பாளர்கள் களத்தில் நின்றனர். இராசலிங்கத்தை எதிர்த்துத் எட்டுப் பேர் போட்டியிட்டனர்.

சாதியத் திமிர் எப்படியும் இராசலிங்கத்துக்கு எதிராகத் தமக்கே வாக்குகளை வழங்கும் என்று இவர்கள் எதிர்பார்த்தனர்.

இதே வேளை, போட்டியிட்ட தமிழ்க் காங்கிரஸ் சார்பிலான வேட்பாளர் மோதிலால் நேரு தமது பரப்புரையில் இப்படிச் சொன்ன ஞாபகம்: -

"கோப்பாய் தொகுதியில் சிறுபான்மை சமூக மக்கள் ( வாக்காளர்கள்) அதிகம் உள்ளனர். அங்கு திரு இராசலிங்கத்தை இறக்கியிருக்கலாம். தமிழரசு தனது மூத்த உறுப்பினர் கதிரவேற்பிள்ளையை விடாமல் தமிழரசின் நலனுக்காக இங்கு ( உடுப்பிட்டியில்) போட்டமை தமிழினத்தில் பிளவுகளை ஏற்படுத்த" என்று காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட மோதிலால் நேரு பேசினார்.

1977 தேர்தல் நடந்து முடிந்து, முடிவுகள் வந்தன.

உடுப்பிட்டித் தொகுதியில் இராசலிங்கம் 18768 வாக்குகள் பெற்றார் அது 63.44 வீதம், அவரை எதிர்த்து நின்ற


(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றத் தேர்தல்- 2024

# மாற்றத்துக்கான விதை மாம்பழமே





## சுயேட்சை குழு 14
## (சனநாயக தமிழரசு கூட்டமைப்பு)

# ஈ.சரவணபவன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
உதயன் குழுமத்தலைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா - நடேஸ்வரக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

- குரு அரவிந்தன்


கனடா - காங்கேசந்துறை நடேஸ்வரக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் கனடா ரொறன்ரோவில் உள்ள 1160, ராப்ஸ்கொட் வீதியில் உள்ள தமிழர் செந்தா மரை மண்டபத்தில் இடம் பெற்றது. இந்தப் பொதுக் கூட்டம் நடேஸ்வரக்கல்லூரியின் பழைய மாணவர்க ளும், சங்கத்தின் காப்பாளர்களுமான திரு. பி.விக்னேஸ் வரன், திரு. குரு அரவிந்தன், திருமதி ராஜி அரசரத் தினம், திரு. முரளிதரன் ஆகியோரின் தலைமையில் இடம் பெற்றது.




முதலில் தமிழ்தாய் வாழ்த்து, கனடா தேசியப்பண், கல்லூரிக்கீதம், அகவணக்கம் ஆகியன இடம் பெற்றன. தொடர்ந்து மன்றத்தின் தலைவர் மார்க் நிர்மலன் அவர் களின் உரை இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து செயலாளர் அறிக்கை, பொருளாளர் அறிக்கை ஆகியன இடம் பெற்றன. நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றபடி, கல்லூரியின் அவசரமான முக்கியமான தேவைகளுக்கு உதவி செய்வதற்கு பொதுச்சபை இணக்கம் தெரி வித்தது. அதேபோல கனிஸ்ட பாடசாலையின் முக்கிய தேவைகள் சிலவற்றைக் குறிப்பாகக் குடிநீர் வசதிகள் போன்றவற்றைச் செய்து கொடுப்பதையும் பொதுச்சபை ஏற்றுக் கொண்டது.

தொடர்ந்து காப்பாளர்களின் உரை இடம் பெற்றது.

இங்குள்ள புதிய தலைமுறையினருக்கு நடேஸ்வரக் கல்லூரியின் வரலாறு பற்றி அதிகம் தெரியாது என்பதால் குரு அரவிந்தன் அதைச் சுருக்கமாகக் குறிப்பிட்டார். 'ஒரு காலத்தில் வலிகாமம் வடக்கில் மகாஜனக்கல்லூரி, யூனியன் கல்லூரிகள் போன்று பிரபலமாக இருந்த நடேஸ்வரக்கல்லூரி போர்ச்சூழல் காரணமாகவும், அதிபாதுகாப்பு வலயத்தில் இருந்ததாலும் கட்டாயமாக இடம் பெயரவேண்டிய நிலை ஏற்பட்டது. குடிமக்களும் முற்றாக இடம் பெயர்ந்தார்கள்.



போர்க்காலத்தில் பல இடங்களுக்கும் இன்னல்க ளுக்கு மத்தியில் இடம் பெயர்ந்து, மீண்டும் பழைய இடமான கல்லூரி வீதிக்கே பாடசாலை வந்திருக்கின் றது. சில மாதங்களுக்கு முன்புதான் அப்பகுதியில் இருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டது. வீடுகளும், கோயில்களும் இடிக்கப்பட்டுத் தரைடமட்டமாக்கப் பட்டதால் குடிமனைகள் இருக்கவில்லை. அதனால் மாணவர்களின் வருகை குறைவாகவே இருந்தது. இதையே சாட்டாக வைத்துப் பாடசாலையை நிரந்தரமாக மூடிவிட முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஆனாலும் பழைய மாணவர்களும், அயலவர்களும் ஒன்று சேர்ந்து பாடசாலையை தொடர்ந்தும் நடத்த முடிவெடுத்தார்கள். அதன் பலன்தான் இன்று பாடசாலை அங்கு சிறப்பாக இயங்கத் தொடங்கி இருக்கின் றது. பாடசாலை விளையாட்டு மைதானமும் திருத்தப் பட்டு, அமரர் தனபாலசிங்கத்தின் பெயரில் பார்வை யாளர் அரங்கம் ஒன்றும் கட்டப்பட்டு இருக்கின்றது. கல்விச் செல்வம் ஒன்றுதான் எம்மிடம் உள்ள நிரந்தர மான செல்வம் என்பதால், மீண்டும் கல்லூரி வழமைபோல இயங்குவதற்குப் பழைய மாணவர்க ளாகிய நாங்கள் எம்மால் முடிந்த அளவு உதவி செய் வோம்' என்று காப்பாளர் குரு அரவிந்தன் தனது உரை யில் குறிப்பிட்டி ருந்தார்.

இலங்கையில் இருந்து 'நடேஸ்வரக் கல்லூரி நம்பிக்கை நிதியக்குழுவில்' அங்கம் வகிக்கும் திரு. ஏ. சிறிரங்க நாதன் மற்றும் எஸ். சிவசுப்ரமணியம் ஆகி யோரும் சிறப்பு விருந்தினர்களா வந்து கலந்து கொண்டு உரையாற்றி னார்கள். அரசு பாடசாலைக்கு நிதி தந்தாலும், அது போதாது என்பதை அவர்களும் சுட்டிக் காட்டினார் கள். வருகை தந்தவர்களுக்கும், மண்டபத்தைத் தந்து தவிய ராஜி அரசரத்தினத்திற்கும் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

---



# வியுக்தியார் பதில்கள்

உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
vi_ukthiyar@gmail.com

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 6 பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றுவதற்காக 396 பேர் போட்டியிடுகின்றனர். 23 அரசியல் கட்சிகளும் 21 சுயேச்சை குழுக்களும் யாழ்ப்பாணத்தில் களமிறங்கி யுள்ளனவாம். எனது நண்பர் ஒருவன் ஒரு சுயேச்சைக் குழுவில் போட்டியிடவிருந்தான். கடைசி நேரத்தில் அவனுக்கு அந்தக் குழுவில் போட்டியிட சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை என்றவுடன் அவனே தலைவரா கக்கொண்டு ஒரு குழுவை இறக்கி போட்டியிடுகின் றான். பாராளுமன்ற தேர்தல் என்பது இவ்வளவு சுலப மாகப் போய்விட்டதா? இப்படி போட்டியிடலாம் என்று எனக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தால் நானும் போட்டியிட்டிருப்பேனே என்று கவலையாக இருக் கின்றதே.

**வியுக்தியார்:** கவலைப்படாதீர்கள் ராஜேஸ். இன்னும் ஐந்து வருடங்களில் மீண்டும் பாராளுமன்ற தேர்தல் நடக்கத்தானே போகின்றது. அதற்கு முன்னர் உள்ளூ ராட்சி, மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடக்கும். நீங்கள் பாராளுமன்றம்தான் போகவேண்டும் என்று விரும்பினால், ஐந்து ஆண்டுகள் தானே கொஞ்சம் பொறுத்திருங்கள் போட்டியிட்டுப் பார்க்கலாம். நான் பல திருமண வைபவங்களுக்குப் போயிருக்கின்றேன். அண்ணளவாக ஆயிரம் பேராவது திருமணத்திற்கு வந்திருப்பாாகள். போட்டியிடும் 396 பேரும் தத்தமது வீடுகளில் கொண்டாட்டங்கள் நடாத்துகின்றபோது வருகின்ற ஆயிரம் பேரையும் சேர்த்தாலே மூன்று லட்சம் பேர் வந்துவிடுவார்கள். அதாவது யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர்கள் அனைவரும் வந்துவிடுவார்கள். ஆக, ஒவ்வொருவருக்கும் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற கணக்காவது தேர்தல் முடிய வந்துவிடும்தானே. சிலருக்கு அவர்கள் குடும்பமும் வாக்களிக்கவில்லை என்ற விபரம் வெளிவந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. அப்படி நடந்தாலும் அவர்கள் அடுத்த தேர்தலிலும் போட்டியிடத்தான் போகின்றார்கள். சில கட்சிகளின் தலைவர்களே அப்படி போட்டியிடுகையில் வெறும் சுயேட்சைகள் எம்மாத்திரம்.

---

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சை குழு வாக களமிறங்கியுள்ள தமிழ் அரசு கட்சியின் அதிருப்தி குழுவினர் தமது தேர்தல் சின்னமான மாம்பழத்துடன் சென்று மாவை சேனாதிராசாவை சந்தித்து ஆசி பெற்ற னர். முன்னதாக தமிழ் அரசின் உத்தியோகபூர்வ வேட் பாளராக களம் இறங்கிய சிவஞானம் சிறிதரனும் வேட்பு மனுவை தாக்கல் செய்த பின்னர் மாவையிடம் சென்று ஆசிர்வாதம் பெற்றார். இந்த செய்திகளை அறிந்தபோது உங்களுக்கு என்ன தோன்றியது?

**வியுக்தியார்:** இதில் தோன்றுவதற்கு என்ன இருக்கின் றது. உத்தியோகபூர்வ வேட்பாளர் என்று நீங்கள் குறிப்பிடும் சிறிதரனும் சொல்லப்போனால் உள்ளேயே இருக்கும் அதிருப்திக்குழு உறுப்பினர்தான். என்ன? அவருக்கு 'தலை' சீற் கொடுத்துவிட்டதால் உள்ளே இருக்கின்றார். மொத்தத்தில் எல்லோருமே அதிருப்திக் குழுவினர்தான். கட்சியில் அதிருப்தியில் உச்சத்தில் இருப்பவர் வேறு யாருமல்ல, அவர்கள் சென்று சந்தித்த மாவை சேனாதிராசாதான். இனம் இனத்துடன்தான் சேரும் என்பார்களே அதுபோலத்தான் இந்தச் சந்திப்புக் கள். வருடப்பிறப்பு போன்ற விசேட தினங்களில் கைவிசேசம் வாங்குகின்றபோது கொஞ்சம் வசதி படைத்தவர்களிடம் வாங்கினால் தமக்கும் அந்த ஆண்டில் வசதிகள் வரும் என்று நம்புவார்கள். ஆனால் மாவையர் மூத்த தலைவர் என்றாலும் தேர்தல்களில் மட்டுமல்ல, கட்சியை காப்பாற்றுவதிலும் தோற்றுப் போய்- வெறும் ஆளாக இருக்கும் போது அவரிடம் அவர்கள் ஆசிபெறுவதுதான் புரியவில்லை.

---

**செல்வா. கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசு ஏற்றுக் கொண்டால் அவர்களுடன் சேர்ந்து முன்செல்லத் தயாராகவுள்ளோம் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள் ளாரே. இவரை வந்து சேர்ந்து தம்மோடு பணியாற்று மாறு ஜனாதிபதி எப்போதாவது அழைத்தாரா?. பாராளுமன்றத்தில் ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நடந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்காவை ஆதரித்து வாக்களித்தபோதும், ரணிலிடம் இப்படி நிபந்தனை விதித்துத்தான் ஆதரவு வழங்கினாரா?

**வியுக்தியார்:** ரணிலுக்கு ஆதரவு வழங்கியபோது என்ன நிபந்தனை விதித்தாரோ தெரிவில்லை. ஆனால் அவருக்கு ஆதரவு வழங்கியதால்தானே, தாய்- தந்தை இல்லாத பெண் ஒருவருக்கு 'பார் லைசன்ஸ்' பெற்றுக் கொடுக்க அவரால் முடிந்தது. இப்போது அவர் ஜனாதி பதி அனுரகுமாரவுடன் சேர்ந்து செல்வதற்காக தமிழர் களின் சுயநிர்ணய உரிமையை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார், அவரிடமே முதலில், உங்கள் கட்சியிலுள்ள மற்றவர்களின் உரிமையை நீங்கள் மதித்து நடவுங்கள் பின்னர் தமிழர்களின் உரிமை பற்றி பேசுவோம் என்று அனுர குமார பதில் சொன்னால் பாவம் மனுசன் ஆடிப்போய் விடுவார்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொள் கைகளை சுமந்து தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் களை வெற்றிபெறச் செய்யுங்கள் என்று அந்தக் கட்சி யின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்துள் ளாரே. அது என்ன கட்சியில் போட்டியிடும் வேட்பா ளர்களுக்கு வாக்களியுங்கள் என்று கேட்காமல், இப்ப டிச் சொல்கிறார். ~~அதன் அர்த்தம் என்ன என்று புரிகின்~~ றதா உங்களுக்கு?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றுமில்லை. அவர் சொல்வது தமிழ் அரசு கட்சியின் கொள்கைகளுக்கு விரோதமானவர்களும், அதாவது அதன் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்களும் அந்தக் கட்சியில் போட்டி யிடுகிறார்கள் என்று சொல்ல வருகின்றார் என்று நினைக் கின்றேன். தற்போதைய தேர்தல் முறையில் கட்சிக்கு வாக்களித்தால், கட்சிக்கு எம்.பி. கிடைப்பார். அவர் களில் யாருக்கு அதிகம் விருப்பு வாக்கு கிடைக்கின் றதோ அவர்தானே எம்.பி.யாக முடியும். அதுதான் கட்சிக்கொள்கைகளை சுமந்த வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்களியுங்கள் என்கிறார் என்று நினைக்கின் றேன்.

---

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பா ளர் பட்டியலால் அதிருப்தியடைந்த அந்தக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சுயேச்சை குழுவாக போட்டி யிடவுள்ளனர். ஆனால் கடந்த தேர்தலில் போட்டி யிட்டு தோல்வியடைந்த சசிகலா ரவிராஜ், அந்த அதி ருப்திக்குழுவில் போட்டியிடாமல், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் போட்டியிடுகிறாரே? அவரும் அதிருப்திக்குழுவில் அல்லவா போட்டியிட்டிருக்க வேண்டும்?.

**வியுக்தியார்:** இப்போதெல்லாம் கட்சிக் கொள்கை களோ அல்லது அறம் சார்ந்த விடயங்களோ அரசியலில் இல்லையே. எங்கே போட்டியிட்டால் 'அதிகம்" கிடைக்கும் என்ற கணக்கைத்தானே அரசியல்வாதிகள் கவனத்தில் எடுக்கின்றார்கள். நான் சொல்ல வருவது, எங்கே போட்டியிட்டால் வெற்றிபெறலாம், அதிக வாக்குகள் கிடைக்கும் என்றுதானே கணக்குப்போடு கின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகோஸ் தீவுகள் - இங்கிலாந்தின் கடைசி ஆபிரிக்க காலனி : மொரிஷியஸுக்கு மீள ஒப்படைப்பு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பல தசாப்தங்களாக நிலவி வந்த தகராறுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பிரித்தானியாவின் கடைசி ஆபிரிக்க காலனியான சாகோஸ் தீவுகளை மொரிஷியஸிடம் ஒப்படைக்க உடன்பாடு எட்டப்பட்டதாக ஐக்கிய இராச்சியம் 3.10.24 வியாழக்கிழமை அறிவித்தது.

சர்வதேச நீதிமன்றத்தால் 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மொரிஷியஸின் இறையாண்மைக்கான அழைப்புகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 2022 இல் தொடங்கிய 13 சுற்று பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.




மொரீஷியஸிலிருந்து சாகோஸ் தீவுக்கூட்டம் பிரிந்ததால் ஏற்படும் சட்ட ரீதியான விளைவுகள் குறித்து சர்வதேச நீதிமன்ற கோரிக்கையின் பேரில் மொரீஷியஸின் பிரதமர் பிரவிந்த் குமார் ஜுக்நாத் ஐநா பொதுச் சபை கூட்டத்தில் அண்மையில் உரையாற்றினார்.

### சட்டத்திற்கு புறம்பான ஆபிரிக்க காலனி

1968 இல் மொரிஷியஸுக்கு சுதந்திரம் வழங்குவதற்கு முன் பிரித்தானியா சட்டத்திற்குப் புறம்பாக பிரித்தானிய அரசால் ‘பிரித்தானிய இந்தியப் பெருங்கடல் பிரதேசம்’ என பெயரிடப்பட்ட சாகோஸ் தீவுக்கூட்டத்தில் ஒரு புதிய காலனியை உருவாக்கியது.

சர்வதேச நீதிமன்ற தீர்ப்புகளை வெறும் ஆலோசனைக் கருத்து என்று வாதிட்டு, தீவுகளை மொரிஷியஸுக்குத் திரும்பக் கோரும் ஐ.நா தீர்ப்புகள் மற்



றும் நீதிமன்றத் தீர்ப்புகளை பிரிட்டன் ஆரம்பத்தில் நிராகரித்தது. சர்வதேச நீதிமன்றம் என அழைக்கப்படும் உலக நீதிமன்றம், நாடுகளுக்கு இடையேயான தகராறுகளை தீர்ப்பளிக்கும் ஐ.நா.வின் கொள்கை நீதித்துறை அமைப்பாகும்.

### தீவுவாசிகளின் கட்டாய இடம்பெயர்வு

மொரிஷியஸிலிருந்து இத் தீவுகளைப் பிரித்து 1,500 முதல் 3000 தீவுவாசிகளை இங்கிலாந்து வெளியேற்றியது. இதன் பின்னர் சாகோஸ் தீவுகளில் மிகப்பெரிய டியாகோ கார்சியாவை அமெரிக்காவிற்கு இராணுவப் பயன்பாட்டிற்காக குத்தகைக்கு விடப்பட்டது. இவ் ஆக்கிரமிப்பை அமெரிக்க - இங்கிலாந்து இரு நட்பு நாடுகளும் கூட்டாகச் செயற்படுத்தின.

ஆக்கிரமிப்பின் பின்னர் சாகோஸில் நிரந்தர மக்கள் தொகை இல்லை என்று இங்கிலாந்து பொய்யாக அறிவித்தது. அதனால் அது தனது காலனித்துவ ஆட்சியை ஐநாவிடம் தெரிவிக்கவில்லை. உண்மையில், சாகோசியன் சமூகம் பல நூற்றாண்டுகளாக அங்கு சாகோஸில் வாழ்ந்து வந்தது.

இங்கிலாந்து மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் 1967 மற்றும் 1973 க்கு இடையில் சாகோசியன் மக்களை வலுக்கட்டாயமாக இடம்பெயர வைத்ததன் பின்னரே டியாகோ கார்சியாவில் பாரிய இராணுவ தளத்தை உருவாக்கியது.

### டியாகோ கார்சியா இராணுவ தளம்

புதிய ஒப்பந்தத்தின் கீழும் டியாகோ கார்சியாவில் உள்ள இங்கிலாந்து-அமெரிக்க இராணுவ தளத்தின் கட்டுப் பாட்டை இங்கிலாந்து தொடர்ந்து வைத்திருக்கும்.

ஐக்கிய இராச்சிய வெளியுறவுச் செய லர் டேவிட் லாம்மி, இராணுவ தளத்தின் எதிர்காலத்தை இங்கிலாந்து அரசாங்கம் பாதுகாத்துள்ளதுடன், நெருங்கிய காமன்வெல்த் பங்காளியான மொரிஷியஸுடனான நமது நீண்டகால உறவுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக சாகோஸ் தீவுகளில் வசிக்கும் பழங்குடியினரான சாகோசியர்கள் தொடர்ந்து வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டு வந்தனர். மேலும் ஒப்பந்தத்தின் வரைவில் அவர்களின் வாழ்விட உரிமை முழுமையாக சேர்க்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர்.

பிரித்தானியா சாகோஸ் தீவுகளை மொரிஷியஸுக்கு திருப்பித் தர, 13 சுற்று பேச்சுவார்த்தைகள் மற்றும் சர்வ

> பிரித்தானியாவின் கடைசி ஆபிரிக்க காலனியான ‘சாகோஸ் தீவுகள்’ தொடர்பாக பல வருடங்களாக நிலவி வந்த கசப்பான சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சாகோஸ் தீவுகளை மொரிஷியஸிடம் ஒப்படைக்க இங்கிலாந்து ஒப்புக்கொண்டுள்ளது

தேச அழுத்தங்களை தொடர்ந்து கடைசி ஆப்பிரிக்க காலனியை திரும்ப ஒப்படைக்க புதிய ஒப்பந்தம் உருவாகி உள்ளது.

1960- 1970களில் தங்கள் சொந்த வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட சாகோசியர்களுக்கு திரும்புவதற்கான உரிமையை இந்த ஒப்பந்தம் அனுமதிக்கிறது. பிரித்தானியாவின் அன்றைய ஆக்கிரமிப்பு மனிதகுலத்திற்கு எதிரான குற்றம் மற்றும் போருக்குப் பிந்தைய காலனித்துவத்தின் மிகவும் அவமானகரமான அத்தியாயங்களில் ஒன்றாக விவரிக்கப்பட்டுள்ளது.

முக்கிய தீவான டியாகோ கார்சியா தொடர்ந்து இங்கிலாந்து-அமெரிக்க கூட்டு இராணுவ தளத்தை கொண்டிருக்கும். மேலும் இது இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் தொடரந்து வைத்திருக்கும்.

### 40 ஆண்டு கால நீண்ட போராட்டம்

1968 இல் இங்கிலாந்தால் சாகோஸ் தீவுகள், மொரிஷியஸின் மற்ற பகுதிகளிலிருந்து பிரிக்கப்பட்டு 3000 பேர் வரை வலுக்கட்டாயமாக இடம்பெயர வைக்கப்பட்டனர்.

40 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த இந்த ஒரு நீண்ட போராட்டத்தில், அங்கு வாழ்ந்த மக்களில் பலர் இறந்து விட்டனர். ஆயினும் 2000 ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து நீதிமன்றங்களில் இத்தீவுகளின் இறையாண்மையின் மீது தொடர்ச்சியான சட்ட சவால்களை எதிர் கொண்டது.

தற்போதய மீள ஒப்படைப்பின் பின்னர், எத்தனை சாகோசியர்கள் தீவுகளுக்குத் திரும்ப விரும்புகிறார்கள் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை, அங்குள்ள குடியிருப்புகள் பல வசிக்கத் தகுதியற்றவை. அங்கு வரும் சாகோசியர்களின் வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என கோரியுள்ளனர்.

தமது தாயகத்தின் இறையாண்மை தொடர்பான இந்த நோக்கத்தை உருவாக்கிய பேச்சுவார்த்தைகளில் இருந்து சாகோசியன் சமூகத்தை விலக்கியதை சாகோசியன் குரல்கள் வருத்தம் தெரிவிக்கின்றன. சாகோசியர்கள் இந்த முடிவை ஊடகங்களிலிருந்து கற்றுக் கொண்டனர். நமது சொந்த எதிர்காலத்தையும் நமது தாயகத்தின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதில் சக்தியற்றவர்களாகவும் குரலற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என ‘சாகோசியன் குரல்கள்’ எனும் பிரிட்டன் மற்றும் பல நாடுகளில் உள்ள சமூக அமைப்பானது கூறியுள்ளது.

அத்துடன் இந்த ஒப்பந்தத்தில் சாகோசியர்கள் கலந்தாலோசிக்கப்படவில்லை அல்லது ஈடுபடவில்லை என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் அமைந்தன எனவும் கூறப்பட்டுள்ளது. இதேவேளை தீவுகளின் பழங்குடியினரான சாகோசியர்களின் கருத்துக்கள் தொடர்ந்து வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகின்றன. மேலும் ஒப்பந்தத்தின் வரைவில் தாயக உரிமை முழுமையாக சேர்க்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர்.

அதேவேளையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், இந்த ஒப்பந்தத்தை நாடுகள் இடையே அமைதியான மற்றும் பரஸ்பரம் அடைய முடியும் என்பதற்கான தெளிவான பார்வை என்று கூறியுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு, கடந்த ஆண்டு அறிக்கையில், சாகோஸ் தீவுவாசிகளின் பலவந்தமான இடப்பெயர்ச்சியால் பாதிக்கப்பட்ட தலைமுறைகளுக்கு முழு மற்றும் நிபந்தனையற்ற இழப்பீடுகளை இங்கிலாந்து வழங்க வேண்டும் என்று கூறியுள்ளது. ஆயினும் இந்த ஒப்பந்தம் இது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திகிய பின்னரும், சாகோசியர்கள் தங்கள் தாய் நாட்டிற்குத் திரும்புவார்கள் என்பதற்கு இது உத்தரவாதம் அளிக்கவில்லை. மேலும் ஒரு நூற்றாண்டுக்கு மிகப்பெரிய தீவான டியாகோ கார்சியாவிலிருந்து அவர்களை வெளிப்படையாகத் தடை செய்வதாகத் தோன்றுகிறது.

மேலும் அவர்கள் அனைவரும் தங்கள் எதிர்காலத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய இழப்பீடுகளை வழங்குவது பற்றி குறிப்பிடவில்லை. இந்த ஒப்பந்தம் அவர்களின் உரிமைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். மேலும் சாகோசியர்களுடன் அர்த்தமுள்ள ஆலோசனைகளை பகிர வேண்டும். இல்லையெனில் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் இப்போது மொரீஷியஸ் நாடும் முன்னைய காலனித்துவ குற்றத்திற்கு பொறுப்பாகும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கோரியுள்ளது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண நிகழ்வில் ஒருவர் படுகொலை

## சந்தேகநபர் தப்பியோட்டம்

கொழும்பு, ஒக். 13

அங்குலானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தொடர்மாடி குடியிருப்பு ஒன்றின் வளாகத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வில் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

அங்குலானை பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

கொலை செய்யப்பட்டவருக்கும் மற்றுமொரு நபருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது.

இதன்போது, சந்தேக நபர் கொலை செய்யப்பட்ட நபரை அடித்துக் காயப்படுத்தியுள்ளார்.

காயமடைந்தவர் லுனாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனையடுத்து, சந்தேக நபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வேட்பாளர்களின் விருப்பு எண்கள் அடுத்த வாரத்தில்

கொழும்பு, ஒக். 13

ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களுக்கு அமைய வேட்பாளர்களின் விருப்பு எண்கள் அடுத்த வாரத் தொடக்கத்தில் வெளியிடப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# பஸ் பருவ காலச்சீட்டை பயன்படுத்தி விடுமுறை நாட்களில் பயணிக்கலாம்!

மாணவர்கள், பேருந்து பருவக் காலச்சீட்டை பயன்படுத்தி விடுமுறை நாட்களில் பயணிக்கலாம் என இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

பாடசாலை, தொழிற்பயிற்சி நிறுவனம், பல்கலைக்கழக மாணவர்கள் பேருந்து பருவக் காலச்சீட்டை பயன்படுத்தி விடுமுறை நாட்களில் பயணிக்கலாம் என, இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகம், மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு அசௌகரியங்களும் இன்றி சனி, ஞாயிறு மற்றும் ஏனைய விடுமுறை தினங்களிலும் பயணிக்கும் மாணவர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய இவ் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மாதத்திற்கு கொடுக்கப்படும் பருவக் காலச்சீட்டை உபயோகித்து மாதத்தின் அனைத்து நாட்களும் பயணிக்க முடியுமென இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தின் பணிப்பின் பேரில் இலங்கை போக்குவரத்து சபை இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன், மாணவர்கள் அசௌகரியங்களின்றி பயணிக்க தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுக்கவும், அமைச்சர் விஜித ஹேரத் இலங்கை போக்குவரத்து சபைத் தலைவரிடம் கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறுபான்மை சமூகங்களை....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆர். ஆர். தர்மரத்தினம் 13.6 வீதம், மோதிலால் நேரு 9.4 வீதம், எஸ்.எஸ். சுந்தரம் 5 வீதம், கே.சி. மகாதேவன் 4 வீதம், பிள்ளையினார் 1 வீதம்.

இதேவேளை சிறுபான்மை சமூக மக்கள் அதிகம் கொண்ட தொகுதியான கோப்பாயில் தமிழர். விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட சி. கதிரவேற்பிள்ளை 77.2 வீத வாக்குகளைப் பெற்றார்.

அன்று தமிழ் மக்கள் சாதிய வேறுபாடுகளையெல்லாம் கடந்து தங்களது சுயநிர்ணயம் பற்றிய சிந்தனையில் ஒற்றுமையாக நின்றார்கள் என்பதையே இத்தேர்தல் முடிவுகள் இன்றும் காட்டுகின்றன.

தென்னிலங்கை அரசியல்வாதி ஒருவர் இராசலிங்கத்துக்குச் சொன்ன ஆலோசனை :-

அன்றைய பிரதமர் பிரேமதாச கரவெட்டி இராசகிராமத்தைத் திறக்க வந்தபோது இராசலிங்கம் அதிற் கலந்து கொண்டதால் இளைஞர்கள் குழம்பி சில சர்ச்சைகள் தோன்றின. அது நடந்த காலப்பகுதியில் தம்முடன் பழகிய சிலருக்கு அமரர் இராசலிங்கம் இந்தக் கதையைச் சொன்னார். ஹரிஸ்பத்துவ எம்.பி விஜயசிறி சொன்ன ஆலோசனைபற்றிய கதையே அது.

1978 இல் கூட்டணித் தலைமையுடன் மனஸ்தாபப்பட்டு அதன் மூத்த தலைவர்களில் ஒருவரான செ. இராசதுரை அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து அரசாங்கத்தில் அமைச்சர்ப் பதவி பெற்ற காலத்தில் பாராளுமன்றத்தில் சுயேச்சை உறுப்பினராயிருந்து ஐ.தே.க வில் பின்னர் இணைந்த ஹரிஸ்பத்துவத் தொகுதி உறுப்பினரான (இரட்டை அங்கத்தவர் தொகுதி -மற்றவர் ஏ.சி.எஸ். ஹமீத்) ஆர்.பி விஜயசிறி இராசலிங்கத்துக்கு ஆலோசனை ஒன்று சொன்னாராம்.

சிங்கள சமூகத்தில் குறிப்பிட்ட சமூக வகுப்பைச் சேர்ந்த அவர் இராசலிங்கத்துக்குச் சொன்னது என்னவென்றால்,

"இராஸ், நீ சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த ஒருவன். உங்களுக்கு இடதுசாரிகளோடோ அல்லது யு என்.பி அல்லது எஸ்.எல் எப் பியோடோ சேர்ந்து உங்கள் உங்கள் சமூகங்களுக்குப் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது. உங்களுக்குப் பலமான கட்சி தமிழர்களுக்குரிய கூட்டணிதான். நீ அவர்களோடு இருந்து தான் உள்ளுக்குள் போராடி உனது மக்களுக்குச் செய்வதைச் செய்யலாம். இராசதுரை மாதிரி அரசாங்கத்தோடு சேரப் பார்க்காதே. ஆட்சி மாறினால் அவ்வளவும் தான். கூட்டணி தான் உங்கள் பலம்" என்றாராம் விஜயசிறீ.

இதனை இராசலிங்கம் தமக்கு நம்பிக்கையானவர்களுடன் பகிர்ந்திருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அவரை பாராளுமன்றக் குழுவில் கல்வி தொடர்பான சுற்றுலாக்களுக்கு அனுப்பியதை அமரர் இராசலிங்கம் பெருமையாகக் குறிப்பிட்டதுண்டு.

மாவட்டங்கள் தோறும் மாதிரிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டபோது இராசலிங்கம் கூட்டணித் தலைமைப்பீடத்திடம் கோரிக்கை விடுத்து கரவெட்டியில் இராசகிராமம் என்ற மாதிரிக் கிராமத்தை அமைத்திருந்தார். அதனைத் திறந்து வைக்க பிரதமர் ஆர்.பிரேமதாச வந்தபோது அதில் கலந்துகொள்ள கூட்டணித் தலைமைப்பீடம் அனுமதியளித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

"நான் கரணவாய் மகாவித்தியாலயம் திரு இருதயக் கல்லூரி, ஞானாசாரியர் கல்லூரி போன்றவற்றுக்கு கட்டிய கட்டிடங்கள் எங்களது மக்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் தேவரையாளி இந்துக் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுவது மட்டும் தான் தெரிகிறது. இப்படியான பார்வையில் இந்த சமூகம் ஒவ்வொரு விடயங்களிலும் இருக்குமானால் எமக்கு விடிவு என்பது தூரத்தில் தெரிகிற நட்சத்திரமும் அல்ல" என்று இராசலிங்கம் அன்று சொன்னது இன்று நிதர்சனமாகிறது.

யாழ்ப்பாணத்தில் 6 ஆசனங்களுக்காக 396 வேட்பாளர் போட்டிபோடும் நிலைக்கு தமிழினம் வந்துள்ளது. ஒவ்வொருவர் மீதும் நம்பிக்கை புரிந்துணர்வு பகிர்வு மனப்பான்மை இல்லாமை போட்டி, பொறாமை, சூழ்ச்சி என்பனதான் இத்தனை இலக்கம் வந்தமைக்குக் காரணமாகும்.

இந்த நிலையில் நாம் தமிழர்களைப் பொறுத்தவரையில் மேலும் சமூக ரீதியாக மத ரீதியாகப் போட்டியிடத்தான் வேண்டுமா?

# தெற்கு அதிவேக வீதியில் மூடப்பட்ட பகுதி திறப்பு

கொழும்பு, ஒக். 13

தற்காலிகமாக மூடப்பட்ட தெற்கு அதிவேக வீதி யில் உள்ள வெலிப்பன்ன இடமாற்ற பகுதி நேற்றுச் சனிக்கிழமை காலை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை வெள்ளம் சூழ்ந்தமையால் குறித்த பகுதி தற்காலிகமாக மூடப்பட்டது.

# ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் புகட்டிய...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களை விளங்கிக்கொள்ள முடியாதவர் களாகவும் பாராளுமன்ற விவாதங்களில் உருப்படியான பங்களிப்பைச் செய்ய இயலாதவர்களாகவும் இருந்தனர். வெறுமனே அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகள் மீதான குருட்டுத் தனமான விசுவாசம் காரணமாகவே சட்டங்களுக்கு ஆதரவளித்தார்கள்.

கடந்த இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்புச் செய்வதற்கும் அதிகரிப்பதற்கும் என்று மாறிமாறி கொண்டு வரப்பட்ட ஐந்து அரசியலமைப்பு திருத்தங்களையும் மனச்சாட்சியின் உறுத்தலின்றி ஆதரித்த பாராளுமன்ற உறுப்பினர்களை நாம் கண்டோம். அவர்களில் சில சட்டமேதைகளும் இருந்தார்கள்.

நாட்டின் மிகவும் உயர்ந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வகித்த பிறகு சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் அரசியலில் ஈடுபடும் ஒரு தரந்தாழ்ந்த நடைமுறையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2015 பாராளுமன்ற தேர்தலில் ஆரம்பித்துவைத்தார். அதற்கு பிறகு இன்னொரு முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவும் 2020 தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு வந்தார்.

தற்போது நாட்டில் ஐந்து முன்னாள் ஜனாதிபதிகள் இருக்கிறார்கள். அவர்களில் திருமதி குமாரதுங்க பதவியில் இருந்து இறங்கிய பிறகு அரசியலில் ஆர்வம் காட்டினாலும் கூட பாராளுமன்றத்துக்கு வருவதற்கு ஒருபோதும் அவர் முயற்சிக்கவில்லை. மற்றையவர்களில் எவருமே இந்த தடவை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. மகிந்த மாத்திரமல்ல, சுமார் இருபது வருடங்களுக்கு பிறகு ராஜபக்ச சகோதரர்களில் எவருமே களத்தில் நிற்காத தேர்தலாகவும் இது அமைகிறது.

2022 மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு தங்களது வாக்குரிமையை பயன்படுத்துவதற்கு கிடைத்த முதல் வாய்ப்பைப் பயன்படுத்தி மக்கள் நல்ல பாடத்தை புகட்டியதன் காரணமாகவே இந்த முன்னாள் ஜனாதிபதிகள் மீண்டும் பாராளுமன்றத்துக்கு வரும் ஆசையை அடக்கிக் கொண்டார்கள். பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு மேலும் பல அரசியல்வாதிகள் தங்களது ஓய்வை அறிவிப்பார்கள் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

தங்களது எதிர்காலத்தைப் பாழாக்காத ஒரு பாராளுமன்றத்தை தெரிவு செய்வதில் மக்கள் இந்த தடவை மிகவும் விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டும் . தங்களது தவறான ஆட்சி முறைக்கு அரசியல்வாதிகள் மக்களைக் குறை கூறியதும் உண்டு.

மக்கள் கிளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் 2022 ஜூன் 9 ஆம் திகதி தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்த முன்னாள் நிதியமைச்சரும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தாபகருமான பசில் ராஜபக்ச தங்களுக்கு வாக்களித்து ஆட்சிக்கு கொண்டு வந்த மக்களும் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பேற்க வேண்டும் என்று செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறியதை எவரும் மறந்திருக்கமாட்டார்கள்.

தங்களது தவறுகளுக்காக மக்கள் மீது ஊழல்தனமான அரசியல்வாதிகள் பழிசுமத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றபோதிலும், மீண்டும் மீண்டும் மக்கள் தவறான ஆட்சியாளர்களை தெரிவுசெய்து வந்திருக்கிறார்கள் என்ற உண்மையையும் மறுப்பதற்கில்லை. மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான காலப் பகுதியில் மக்களின் அரசியல் சிந்தனைகளில் ஏற்பட்ட மாற்றத்தை ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் தெளிவாகப் பிரதிபலித்தன.

அதன் பின்புலத்தில், மக்கள் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பெருமளவுக்கு விவேகமான முடிவை எடுப்பதற்கான தெளிவான அறிகுறிகள் தென்படுகின்றன. நேர்மையானவர்களை மாத்திரமல்ல, கொள்கை வகுக்கும் செயன்முறைகளில் பயனுறுதியுடைய பங்களிப்புகளை வழங்கக்கூடியதாக பாராளுமன்ற விவகாரங்களில் அறிவைக் கொண்டவர்களையும் மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

சட்டமூலங்களில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதையோ அல்லது சபையில் விவாதிக்கப்படும் விடயம் என்ன என்பதையோ விளக்கிக்கொள்ள முடியாதவர்களும் மக்கள் பிரதிநிதிகளாக சலுகைகளை அனுபவித்துக்கொண்டு இருந்தார்கள். வெறுமனே உணர்ச்சிவசமான சுலோகங்களுக்கு எடுபடுகின்ற போக்கில் இருந்து மக்கள் முற்றாக விடுபடவேண்டும்.

பொதுவாழ்வைத் தூய்மைப்படுத்துவதற்கு படிப்படியாக முன்னெடுக்கப்படவேண்டிய பணிகளில் மக்கள் விவேகமான முறையில் தங்கள் பங்களிப்பை வழங்குவதற்கு கிடைத்திருக்கும் ஒரு நல்ல வாய்ப்பாக இந்த தடவை பாராளுமன்ற தேர்தல் அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதி மற்றும் சமந்தா பவர் ஆகியோருக்கு இடையில் கருத்துப் பரிமாறப்பட்டதுடன், எதிர்காலத்தில் இலங்கைக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரசாங்கம் முன்வைத்த கொள்கை அறிக்கைக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் கொள்கைகளுக்கும் இடையிலான ஒற்றுமையை இதன்போது சுட்டிக்காட்டிய சமந்தா பவர், மக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையத்தின் முழு ஆதரவு வழங்கப்படும் என்றும் அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை விரிவுபடுத்தவும் அதே போன்று சர்வதேச அபிவிருத்திக்க ான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும் இந்தச் செயற்பாடுகள் உதவும் எனவும் சமந்தா பவர் சுட்டிக்காட் டினார். (அ)

## சீரற்ற...

மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேலும், சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட அவதானத்துடன் செயற்படுமாறும், நிவாரணப் பணிகளை வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

அவசரகால நிலைமையால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தேவையான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்தந்த மாகாணங்களின் அரச அதிகாரிகளை தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் அந்த நிவாரணங்களை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். அதுவரை மக்கள் அவதானமாக இருக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இந்த நிவாரணப் பணிகளுக்காக 50 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு நிதியமைச்சுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, உரிய நிவாரணங்களை முறையாக மக்களுக்கு வழங்குவதற்கு நன்கு ஒருங்கிணைந்து செயற்படுமாறும் அரச அதிகாரிகளுக்கு மேலும் அறிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 11 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் 6,018 குடும்பங்களைச் சேர்ந்த 24,492 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

23 நிவாரண மையங்களில், 584 குடும்பங்களைச் சேர்ந்த 2,200 பேர் தற்போது பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் படைகளின் பிரதானி அலுவலகத்தின் ஊடாக, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் அரச அதிகாரிகளின் ஒருங்கிணைப்புடன் நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவசரகால நிலைமைகள் பற்றிய தகவல்களை, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 அழைப்பு நிலையம் மற்றும் 0112136136, 0112136222, 0112670002 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் தெரிவிக்கலாம். (அ)

## அமைச்சர்களின்...

தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் விசாரணைகள் தொடர்பான விவரங்கள் விரைவில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வல்வை...

ஆவணம் மூலம் கண்டறியப்பட்டது.

மோட்டார் சைக்கிள் மற்றும் பட்டா வாகனம், ஓட்டோ என்பன மோதுண்டு குறித்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. பழைய இரும்பு சேகரிக்கும் இளைஞர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பட்டா வாகனத்தில் வேகமாக வந்துள்ளனர். பாலத்தின் அருகில் பிரேக் பிடித்தபோது, வழுக்கிச் சென்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் மோதியுள்ளது.

இதேவேளை ஓட்டோ சாரதி வாகனத்துடன் தப்பிச்சென்ற நிலையில் 21 வயதான பட்டா வாகனச் சாரதியை பொலிஸார் கைது செய்தனர்.

உயிரிழந்தவர் அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-02)

## வெளிநாட்டு...

அமைப்புகள் குறிப்பிடுகின்றன.

இது மிகவும் கடினமான பணியாக இருந்தாலும், அதற்காக உன்னிப்பாக செயற்படுவதாக கூறும் அந்த வட்டாரங்கள், இதுபற்றிய தகவல் யாருக்கேனும் தெரிந்தால் சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாராளுமன்ற...

கடந்த காலங்களில் பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணிகளில் போட்டியிட்ட பல கட்சி கள் தேசிய மக்கள் சக்தியின் கூட்டணியின் கீழ் போட்டியிட பேச்சுகள் நடத்திய போதிலும் அதற்கு சாதகமான பதில்கள் கிடைத்திருக்கவில்லை.

"சில கட்சிகள் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களை சந்தித்து எமது கூட்டணி யில் போட்டியிடுவதற்கான கோரிக் கையை முன்வைத்தபோதிலும் கொள்கை ரீதியான பிரச்னை காரணமாக அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஊடகங்களுக்கு தெரிவித்திருந் தார்.

அரசியல் ரீதியாக மோசடிகளில் ஈடுபடாத ஒரு குழுவினர், பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படவேண்டுமென நாட்டு மக்கள் எண்ணுகின்றனர். அதனால் எந்தவொரு கட்சியையும் தமது கூட்ட ணியில் இணைத்துக் கொள்ளவில்லை என்றும் ரில்வின் சில்வா கூறியிருந்தார்.

என்றாலும், குறித்த கட்சிகள் பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய மக்கள் சக்திக்கு தமது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளன.

பொது மக்களுக்கு சாதகமான சட்டங் களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிப்பதாகவும் குறித்த கட்சிகள் உறுதியளித்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகளை காட்டிலும் பொதுத் தேர்தலில் மேலும் வாக்குகள் அதிகரிக்கும் என பிவிதுரு ஹெல உறுமிய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (அ)

## அநுர...

அரசு சீனாவுக்கு ஆதரவான கொள்கையைப் பின்பற்றுமா, இந்தியாவுக்கு ஆதர வான கொள்கையை பின்பற்றுமா அல்லது அமெரிக்க சார்பு நிலைப்பாட்டில் இயங்குமா என்பதை இவ்வாறு தூதரகங்கள் அவதானித்து வருகின்றன.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் சீனாவுக்கு சார்ப்பான போக்கையே பின்பற்றுமென கடந்த காலத்தில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அதனை அநுரகுமார திஸாநாயக்க நிராகரித்ததுடன், தமது அரசு அணிசாரக் கொள்கையையே பின்பற்றும் எனக் கூறியிருந்தார்.

அதேபோன்று கடந்த ஆண்டு புதுடில்லிக்கு பயணம் மேற்கொண்டிருந்த அவர், இந்தியாவுக்கும் தெற்காசிய பிராந்தியத்துக்கும் பாதகமான வெளிவுறவு கொள்கையை தாம் ஆட்சிக்கு வந்தால் பின்பற்ற மாட்டேன் என இந்திய ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணல்களில் கூறியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் பின்னர் முதல் இராஜதந்திரியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கைக்கு வந்ததுடன், இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்க இந்தியா தயாரக இருப்பதாக உறுதியளித்துச் சென்றார். அத்துடன், ஜனாதிபதி அநுரவை இந்தியாவுக்கு அதிகாரப் பூர்வ பயணம் மேற்கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்திருந்தார். அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, பொதுத் தேர்தலின் பின்னர் முதல் வெளிநாட்டு பயணமாக இந்தியாவுக்குச் செல்ல உள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களில் அநுரகுமார திஸாநாயக்க, பல வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்த போதிலும் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் மிக இரகசியமாக சீனாவுக்கு பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

ஏனைய பயணங்களின் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்த போதிலும், அநுரவின் சீன பயணம் தொடர்பான தகவல்கள் ஊடகங்களில் வெளியிடப்படவில்லை. இந்தப் பயணத்திற்குத் தேவையான வசதிகளை சீன மத்திய அரசின் சக்தி வாய்ந்த பெண்மணியான சன் ஹையான் செய்து கொடுத்ததாகவும், அநுரவின் இந்தப் பயணத்தில் சீனாவின் இராஜதந்திரிகளுடன் சில உடன்பாடுகளை எட்டியதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஜனாதிபதியாக அநுர பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் சீன தூதர அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பில் இலங்கைக்கு உடனடி ஆதரவாக, எதிர்வரும் டிசெம்பரில் தொடங்கும் சுற்றுலாப் பருவத்தில் 30 இலட்சம் சீன சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட குழுவை இலங்கைக்கு அனுப்புவதாக சீன அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

அடுத்த சுற்றுலா பருவம் தொடங்கும் போது அதை 60 இலட்சமாக உயர்த்தவும் சீன அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர். சீனாவின் இந்த நகர்வு குறித்து இலங்கையில் உள்ள மேற்குலக இராஜதந்திரிகள் தற்போது கவனம் செலுத்தியுள்ளனர்.

அதன் பிரகாரமே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சீன நட்பு குறித்து இந்தியா, அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் உன்னிப்பாக அவதானம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

எவ்வாறாயினும், சீனா, இந்தியா, அமெரிக்கா, மேற்குலக நாடுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தை சமநிலைப் படுத்தும் தேவை அநுர அரசாங்கத்துக்கு உள்ளதாக இலங்கையின் மூத்த அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

## தமிழரசு...

குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை தேர்தலில் தமிழரசுக்கட்சி வன்னியிலும் யாழிலும் ஆறு ஆசனங்களை வெல்லக்கூடிய சூழல் இருந்தது. ஆனால் இன்று சுயநலவாதிகளின் டம்மி விளையாட்டால் ஒரு ஆசனம் பெறுவதே பெரும் போராட்டமாக மாறியுள்ளது. எமது கட்சியின் தேர்தல் நியமனக் குழுவானது கடந்த 2018 இல் தேர்வு செய்யப்பட்டது. அதில் சட்டத்தரணி தவராசா, சாள்ஸ் நிர்மலநாதன், ஈ.சரவணபவன், நான் உட்பட நான்கு பேர் இருந்தோம். இந்த நிலையில் திடீர் என நிகழ்ச்சி நிரல் இல்லாமல் எமது நான்கு பேரின் பெயர்களையும் வெட்டிவிட்டு புதிதாக சாணக்கியன், செயோன், ரஞ்சினி ஆகியோர் சேர்க்கப்பட்டனர். இதனாலேயே இந்த மோசமான நிலை கட்சிக்கு ஏற்பட்டது.

தான்மட்டும் வன்னியில் வெல்ல வேண்டும் என்ற டம்மி விளையாட்டே இது.எனவே பதில் பொதுச் செயலாளருக்கு நான் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளேன். இவர்களை இப்படியே விட்டால் கட்சிக்கு இன்னும் பல கேடுகளை செய்வார்கள். இவர்கள் உடனடியாக அகற்றப்படவேண்டும். தோல்வியடைந்தவர்களை வேட்பாளராக போடுவதில்லை என்று கட்சி ஒருபோதும் முடிவெடுக்கவில்லை. அப்படி ஒரு தீர்மானம் பொதுக் குழுவிலும், மத்திய குழுவிலும் இல்லை. கட்சியை வெட்டிவிட்டு ஒரு சிலர் வெல்லலாம் என்பது மிகவும் மோசமான செயல். எப்படி இந்த சதிவேலையினை திட்டமிட்டுள்ளார்கள் என்று பாருங்கள்.

தலைவராக இருந்தும் நியாயமான முறையில் வேட்பாளர் நியமனங்களை செய்யமுடியவில்லை என்பதாலும். நியமனக் குழுவில் இருந்த ஏனையவர்களை இணைக்க முடியாமல் போனதாலுமே மாவை சேனாதிராசா பதவி விலகினார்.

இன்று வன்னியில் புதிதாக போடப்பட்ட வேட்பாளரான ரவீந்திரகுமார் மாவட்டக் குழுவில் விண்ணப்பம் தராதவர். அவுஸ்ரேலியாவில் நிரந்தர வதிவுரிமை கொண்டவர்.

வேட்பாளராக என்னை தெரிவு செய்யுமாறு நான் ஒருபோதும் கோரவில்லை.எனக்கு பதிலாக புதுக்குடியிருப்பு பிரதேச கிளையின் செயலாளரான விமலதாஸையே நான் பரிந்துரை செய்தேன்.

கட்சியால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீறி இவர்கள் செயற்பட்ட விதமானது தமிழரசுக் கட்சியினை இன்று கீழ்நிலைக்கு கொண்டு சென்றுள் ளது. பொதுச் செயலாளர் பதவி என்பது விட்டுக்கொடுப்புடன் அனைவரையும் அரவணைத்து ஒன்றாக இணைத்துச் செல்லும் ஒரு பதவி. தமிழரசுக் கட்சி யின் தந்தை செல்வா, அமிர்தலிங்கம் போன்றோர் இந்தப் பதவியினூடாக தங்களுக்குள்ளேயே விட்டுக்கொடுத்து செயற்பட்டிருந்தனர்.ஆனால் அந்த பதவி இன்று டம்மியான புல்லுருவிகளால் நாசமாக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

## ஏழு விசாரணை...

பாராளுமன்றத்துக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்ட ஊடகவியலாளர் தராகி சிவராம் (தர்மரட்ணம் சிவ ராம்) மரணம் தொடர்பான விசாரணையும் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

வெலிகமவில் டபிள்யூ 15 ஹோட்டலுக்கு அருகாமையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மரணத்துக்கு காரணமான டிசெம்பர் மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக தல்துவ தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தன் ரவீந்திரநாத் காணாமல்போனமை தொடர்பான விசாரணையும் இதில் அடங்கும் என அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சஜித் பிரேமதாஸவுடன் முரண்பாடு விலகினார் அஜித் மான்னப்பெரும!

## கூறுகிறார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, ஒக். 12

இம்முறை பொதுத் தேர்தலின்போது தமக்கு மக்கள் வாக்களிக்க வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தனது ஆதரவாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்

தாம் பொதுத் தேர்தல் போட்டியில் இருந்து விலகிக் கொள்வதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் தாம் விலகிக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

கம்பஹா மாவட்ட வேட்புமனுப் பட்டியலில் தனது பெயர் உள்ளடங்கியுள்ளபோதிலும் இவ்வருட பொதுத் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட அமைப்பாளர் பதவியில் இருந்து தாம் நீக்கப்பட்டமையால் இந்த தீர்மானம் எடுத்ததாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியலில் நான் வேட்பாளராக களமிறங்கியுள்ளேன்.

அத்துடன், 20 வருடங்களாக கம்பஹா தொகுதி அமைப்பாளராக கடமையாற்றி வருகின்றேன்.

ஆனால் இம்முறை என்னை ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக நியமித்தாலும், வாக்கு கேட்பதைத் தவிர்க்க எண்ணினேன்.

நான் குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்ற விரும்பவில்லை. எனவே அந்த வாக்கை எனக்காக பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனெனில் எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நான் விரக்தியடைந்துள்ளேன்.

வேட்புமனுவில் கையொப்பமிட்டு 24 மணித்தியாலங்களுக்குள் ஐக்கிய தேசியக் கட்சியில் ரணில் விக்கிரமசிங்கவிடம் பணியாற்றிய ஒருவருக்கு கம்பஹா தொகுதியின் ஆசன அமைப்பாளர் பதவி இரகசியமாக வழங்கப்பட்டது. இது மிகவும் வெறுப்பாக உள்ளது - என்றார். (அ)

# நாட்டில் நாளாந்தம் 8 உயிர் மாய்ப்புகள்!

கொழும்பு, ஒக். 13

நாட்டில் நாளாந்தம் 8 உயிர் மாய்ப்பு சம்பவங்கள் பதிவாவதாக, இலங்கை வைத்திய சங்கத் தலைவர் சஜீவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சிறுவர்களின் உடல், உள நடத்தையில் மாற்றங்கள் ஏற்பட்டால், அவர்களை உடனடியாக வைத்தியர்களிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

உலகில், அதிகளவான உயிர் மாய்ப்பு சம்பவங்கள் பதிவாகும் நாடுகளில், இலங்கை 21 ஆம் இடத்தில் காணப்படுகின்றது.

இதனால், ஒருவர் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தால், 1926 அல்லது 1333 என்ற மன நல உதவிச் சேவை குறித்த தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ள முடியும் என இலங்கை வைத்திய சங்கத் தலைவர் சஜீவன அமரசிங்க குறிப்பிட்டார். (அ)

# ஊழல் அரசியல்வாதிகள் ஒதுங்குவது ஜனாதிபதிக்கு கிடைத்த பெருவெற்றி

## தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு நன்றி



கொழும்பு, ஒக். 13

"ஊழல் அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து ஒதுங்குவது அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியானதற்கு கிடைத்த பெருவெற்றி" என்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தோல்வியிலிருந்து தப்புவதற்காக ஊழல் மற்றும் இனவாத அரசியல்வாதிகள் இந்த முறை தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்துக்கொண்டுள்ளனர் என தெரிவித்த அவர் அடுத்த தேர்தலில் அவ்வாறான அரசியல்வாதிகள் வேட்பாளர்களாக நிற்காத நிலையை ஏற்படுத்தியமை பொதுத் தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வெற்றி என்றும் கூறினார்.

அநுரகுமாரவை ஜனாதிபதியாக தெரிவு செய்தமைக்காக மக்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். இது இறுதியில் ஊழல், இனவாத அரசியல்வாதிகளின் அரசியல் வாழ்க்கையை முடித்து வைத்தது. ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமாரவுக்கு வாக்களித்தன் மூலம் மக்கள் சிறந்த செயலை செய்தனர் - என்றார். (எ)

# இணையவழியில் மோசடி செய்த 120 சீனப் பிரஜைகள் கைதாகினர்!

கொழும்பு, ஒக்.

கண்டி குண்டசாலை பிரதேசத்தில் உள்ள சொகுசு வீடு ஒன்றில் தங்கியிருந்து, இணையவழி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், 120 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த சொகுசு வீட்டில் சுமார் 47 அறைகள் காணப்படுவதாகவும், கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகளிடம் இருந்து 15 கணினிகள் மற்றும் 300 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் கடந்த ஏழு நாட்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில், இணையவழி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 200 வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹங்வெல்ல பிரதேசத்தில், கடந்த 6 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 30 சீனப் பிரஜைகளும், 4 இந்தியப் பிரஜைகளும், 6 தாய்லாந்து பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவல பிரதேசத்தில், கடந்த 7 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 19 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை பிரதேசத்தில் கடந்த 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 20 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# மாணவிகளுடன் முறையற்ற நடத்தை; இரண்டு ஆசிரியர்கள் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 13

கோண்டாவில் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவிகளுடன் முறையற்ற நடத்தையில் ஈடுபட்ட இரண்டு ஆசிரியர்கள் மற்றும் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காத அதிபர் தொடர்பாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோரால் கடிதம் மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலையில் கல்வி கற்பிக்கும் இரண்டு ஆசிரியர்கள், பெண் பிள்ளைகளை பாடசாலையின் தனிப்பட்ட அறையில் அழைத்து விசாரிப்பது, முறையற்ற நடத்தைகள் என்பவற்றில் ஈடுபடுவதுடன் இடுப்பைப் பிடித்து நடனம் ஆடுகின்ற முயற்சிகளிலும் ஈடுபடுகின்றனர் என பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பெற்றோர் அனுப்பியுள்ள கடிதத்தில் -

இதனால் குறித்த பிள்ளைகள் பாரிய மன உளைச்சலை சந்திப்பதுடன் பாடசாலைக்குச் செல்ல மறுக்கின்றனர். இச்சம்பவத்தை பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளருக்கு தெரியப்படுத்தி அவரையும் பாடசாலைக்கு அழைத்துச் சென்று அதிபருக்கு தெரியப்படுத்தினோம். அன்றைய தினம் ஆசிரியரொருவரினால் றீப்பை தடியினால் எமது பிள்ளைகள் தாக்கப்பட்டு அடிகாயங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வளவு சம்பவங்கள் இடம்பெற்றபோதும் அதிபரினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே அதிபரும் இணைந்து இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். ஆகவே இவர்களை இடைநிறுத்தி விசாரணை மேற்கொண்டு உரிய தண்டனைகளை வழங்குவதுடன் இடமாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவற்றை தாங்கள் செய்வதன் மூலம் எமது பிள்ளைகள் அச்சமின்றி பாடசாலைக்கு சமூகமளிக்க முடியும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் வலயக் கல்வி பணிமனை, கோப்பாய் பொலிஸார், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம் என்பன விசாரணைகளை ஆரம்பித்துள்ளன. (அ)

# தேர்தல் பிரசாரத்துக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு, ஒக். 13

பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பிரசார வேலைத்திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம், மாவட்டங்களுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதனால், பாதுகாப்பு வேலைத் திட்டத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் பிரதிநிதிகளிடம் இருந்து பெறப்படும் தகவல்களுக்கு அமைய, உரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அதிபர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

# கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ் நேற்று தீவகப் பகுதிக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஒக். 13

இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ், யாழ்ப்பாணம் தீவகப் பகுதி கடற்றொழில் அமைப்புக்கள் மற்றும் தீவக பெண்கள் வலையமைப்பின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு நேற்று காலை புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில், வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா, மெசிடோ நிறுவனப் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, தீவக பெண்கள் வலையமைப்பினர், தீவக பகுதி கடற்றொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். (அ)

# இவ்வருடம் இதுவரை 20 டெங்கு மரணங்கள்

கொழும்பு, ஒக். 13

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதி வரை, 40 ஆயிரத்து 494 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதுடன் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை, 17 ஆயிரத்து 159 ஆக காணப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் 10 ஆயிரத்து 150 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில், 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org